# கிழக்கொளி

ஒளி: 3 சித்திரை - ஆனி - 94 கதிர் : 2

பிரதம ஆசிரியர்:
எஸ். எஸ். சூரியகாந்தன்

இணை ஆசிரியர்:
ந. ஜெகநாதன்

ஆசிரிய பீட உறுப்பினர்கள்:
S. V. புவிராஜசிங்கம்
S. ஆதவன்
K. கதிர்காமத்தம்பி
N. விஸ்வலிங்கம்

தனிப்பிரதி விலை: ரூபா 10/-

ஆக்கபூர்வமான கட்டுரைகள், கதைகள், கவிதைகள் போன்றவற்றை 'கிழக்கொளி' உங்களிடமிருந்து வரவேற்கிறது. தங்கள் தரமான, கனமான ஆக்கங்கள் புல்ஸ்காப் தாளில் ஒருபக்கத்தில்மட்டுமே எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.

தொடர்பு!
''பிரதம ஆசிரியர்''
''கிழக்கொளி''
விவசாய பீடம்,
கிழக்குப் பல்கலைக்கழகம்,
செங்கலடி.



## நுழைவாயில்

1) பல்கலைக்கழகம் ...03
2) ஈழத்தின் முதல் ...06
3) மெழுகுவர்த்தி எரிகின்றது ...09
4) கிரிக்கட் விளையாட்டின் ...11
5) உறவு என்னும் உலகங்கள் ...13
6) இலங்கையில் வங்கியியல் ...15
7) கவிதை ...17
8) வாசகர் பகுதி ...18
9) விவாகப் பொருத்தம் ...19
10) காளான்கள் உணவாக ...21
11) இலங்கையில் உள்ளூராட்சி ...23
12) உலக நாடக ...25
13) குறுக்கெழுத்துப் போட்டி ...27

கிழக்குப் பல்கலைக் கழக ஊழியர் சங்க வெளியீடு

ஜேசு ரவல்ஸ் பிறைவட் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரின்

## நற்செய்தி

1. தினசரி காலை, மாலை பஸ் சேவை.
2. கொழும்பு சேவை ஆரையம்பதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.
3. மாலை சேவை, வெள்ளவத்தை வரை நீடிக்கப்பட்டுள்ளது.

### தற்போது நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டுள்ள காலை, மாலை சேவை நேர அட்டவணை

15-10-93 முதல் : காலை சேவை—காலை 7 மணிக்கும்
மாலை சேவை—மாலை 2 மணிக்கும் நடைபெறும்.

காலை சேவை—காலை 7 மணிக்கு மட்டக்களப்பிலிருந்து புறப்படும்.
மாலை சேவை—பிற்பகல் 1-30 மணிக்கு ஆரையம்பதியிலிருந்து புறப்படும்.
கொழும்பிலிருந்து புறப்படும் நேரம் : இரவு — 10 மணி
காலை — 6 மணி

கொழும்பிலிருந்து புறப்படும் சேவையாவும் காத்தான்குடி மெயின் வீதி ஊடாக, ஆரையம்பதி வரை நீடிக்கப்பட்டுள்ளதென்பதை மிக மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

### ஆசனப் பதிவு செய்யும் இடங்கள் விபரம்

ஆரையம்பதி - அரசினர் வைத்தியசாலைக்கு அருகாமை } மாலை சேவை
காத்தான்குடி - ரூபவாஹினிக்கு முன் - சித்திக்(ரன்னர்) } மட்டும்
மட்டக்களப்பு - தயா மோட்டோர் ஸ்ரோர்ஸ், 288, திருமலை வீதி, மட்டக்களப்பு. தொலைபேசி இல. 065 - 2030, 065 - 2156
கொழும்பு - ஹோட்டல் சவுத் ஆசியா, (கோட்டை புகையிரத நிலையம் முன்) இல, 8. கீர்த்தி ஒழுங்கை, (இரண்டாம் மாடி) 105, ஒல்கொட் மாவத்தை, கொழும்பு - 11. தொலைபேசி இல. 01-423312

---

# *Sivas Auto Stores*

PROP: S. C. SIVAPATHASUNDRAM

Dealers in Massey Ferguson, Ford Tractors & Japanese Spare Parts & Accessories

Main Dealer: Brown & Co. Ltd.

Dealer: SRI LANKA STATE TRADING TRACTOR CORPORATION;

Dealer: SATHIYAWADI STORES & MOTOR TRANSPORTERS LTD.

*131, Trinco Road, BATTICALOA.*

Sri Lanka (Ceylon)

Phene: 065-2449



# நுழைவாயில்

வருடம் வருடம் புத்தாண்டுகள் பிறந்து கொண்டுதான் இருக்கின்றன. ஆனால் நாம் அனைவரும் மனம் குளிர்ந்து கொண்டாடக்கூடிய ஒரு புத்தாண்டு இன்னமும் பிறக்கவில்லை. அந்த நாட்களிலே மலர்ந்த புத்தாண்டு போல ஒரு புத்தாண்டு பிறக்காதா என்று ஓர் ஆதங்கம் எங்கள் மனதிலே! என்றோ ஒரு நாள் அது பிறக்கத்தான் போகின்றது. புத்தாண்டு எப்படித்தான் பிறந்தாலும் கிழக்கொளி தன் வழமையான கலை, இலக்கிய அம்சங்களுடன் ஒளி வீசத்தான் போகிறது.

வாசகர்கள் கிழக்கொளி மீது கொண்ட நேயம், அதன் வளர்ச்சிக்கு ஊன்றுகோலாகத் திகழ்கிறது. அதனால் இவ்விதழிலிருந்து கிழக்கொளியின் விலையை ரூபா 10 ஆகக் குறைத்துள்ளோம். கிழக்கொளி அனைவரினதும் கைகளில் வலம் வர வேண்டுமென்பதே எங்கள் அவா. நாளுக்குநாள் விலைவாசி ஏறிக் கொண்டு போகின்ற இந்தக் காலகட்டத்திலே கிழக்கொளி விலை குறைப்பு வாசகர் மத்தியில் தப்பபிப்பிராயங்களை ஏற்படுத்தலாம். இதுவரை காலமும் வாசகர்கள் தந்த பரிபூரண ஒத்துழைப்பே விலைக்குறைப்பை உருவாக்கியதே தவிர வேறு எக்காரணமுமல்ல.

முழுக்க முழுக்க வியாபார நோக்கத்தையே கொண்ட கலை, இலக்கிய சேவை நீடு வாழாது. கிழக்கொளியோ வியாபார நோக்கத்தைக் கைவிட்டு இலை மறைகாயாக இருப்போரை வெளி உலகுக்கு மேடையேற்றும் ஒரு அரங்காக செயற்படுவது குறித்து பலரும் மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர். உங்களுக்கு சேவை செய்வதற்கென்றே இவ்வரங்கு அமைக்கப்பட்டுள்ளது. உங்கள் ஆக்கங்களை எங்களுக்கு அஞ்சலாக்குங்கள்.

இம்முறை கிழக்கொளியில் புதுமையான பல அம்சங்கள் இணைக்கப்பட்டுள்ளன. இதைவிட மேலும் பல புதுவித அம்சங்கள் உண்டு.

ஒரு நாளில் 24 மணித்தியாலங்கள், கடமைக்கு எட்டும், தூக்கத்திற்கு எட்டும் போக மீதி எட்டு. இந்த எட்டு, 480 நிமிடங்களாகும். இதில் ஒரு 80 ஐந்தானும் எங்களுக்காக ஒதுக்குங்கள், உங்கள் பேனா உங்கள் கற்பனைத் திறனையோ, ஆய்வுத்திறனையோ காகிதத்தில் வடிக்கட்டும். நிச்சயம் அது கிழக்கொளியில் பிரசுரமாகும். விரைவில் நீங்களும் ஓர் ஊரறிந்த எழுத்தாளராகி விடுவீர்கள்! சிந்தியுங்கள்! செயற்படுங்கள்! குறித்த இலக்கை எளிதில் அடைவீர்கள்.

— ஆசிரியர்

கண்ணைப்பறிக்கும்
நவீன டிசைன்களில்
அசல் 22 கரட் நகைகளுக்கு
என்றும் நாட வேண்டிய இடம்



**P. Subramaniam**
**Jewellery**
7 & 22, UDA Building
Lady manning Drive,
Batticaloa.

நவீனரக 'பாட்டா'
காலணிகளுக்கும்,குறைந்த விலையில்
அழகு சாதனப் பொருட்களுக்கும்,
சகல வீட்டுப்பாவனைப்
பொருட்களுக்கும்
நாடவேண்டிய இடம்

**Sajiths Multi Shop**
No. 3, Trinco Road,
Batticaloa.
☎ 065 – 2935.

திருமணவைப விழாவா?
பூப்பு நீராட்டு விழா வா?
பரிசளிப்பு வைபவமா?
பாராட்டு விழாவா?
பிறந்த நாள் கொண்டாட்டமா?

சகல மங்கல வைபவங்களையும் என்றும்
நினைவில் நிறுத்த நாடுங்கள்.

**Studio Lake**
Professional Photographers,
43, Munai Street,
Batticaloa.

நெஞ்சையள்ளும் வண்ண வண்ண
டிசைன்களில் துணி வகைகளை
சகாய விலையில் பெற
இன்றே நாடுங்கள்.

**Thurja Textile**
Central Road,
Batticaloa.

**Branch:**
32, Main Street,
Kattankudy.

# 'பல்கலைக்கழகம் போவோம்'

கலாநிதி P. V. இராமக்கிருஷ்ணன்

இது இன்று ஒரு சுலோகமாகி விட்டது. ஒரு வகைப் போர்க் கோலம். பட்டதாரிகள், டாக்டர்கள், என்ஜினியர்கள், வேண்டும் நாடு முன்னேற. இது பலர் கடைப்பிடிக்கும் நம்பிக்கை. இது சரியென்பதற்கு ஆதாரமென்ன? ஆதாரம் காட்டினாலும் ஏற்றுக் கொள்ள வேண்டியது அவசியமா?

உனக்கேன் அந்தக் கேள்வி? ஆராய்ச்சிக்கென வேறேதும் விடயங்கள் எட்டவில்லையோ? தான் மட்டும் படித்துப் பட்டங்கள் பெற்றபின், தனது பிள்ளைகளும் படித்துப் பட்டங்கள் பெற்றபின், இவ்வித ஆராய்ச்சியில் இறங்கியிருக்கிறார். மற்றவர்கள் முன்னேறுவது இவருக்குப் பிடிக்கவில்லைப்போலும். தன்னையும் தன் குடும்பத்தவரையும் மிஞ்சி விடுவார்கள் எனும் பயமா?

பலர் தாழ்ந்த நிலையில் இருந்தால் மட்டுமே ஒருவர் உயர்ந்த மட்டத்தில் இருக்கிறார் என்பது தெரிய வரும். சரிக்குச்சரி வந்துவிட்டால் இனி இவருக்கு நடப்புக் கிடையாது. ஓலைக்குடிசைகள் பல இருந்தால் மட்டுமே மாடி வீட்டுக்கு மதிப்பு. எல்லோரும் கல்வீடு கட்டிவிட்டால் இவரும் பலருள் ஒருவராகி விடும் ஆபத்துண்டு. 'ஐயா' என்று அழைக்கப்படும் றெஸ்பெக்டை இழந்த நிலை. சகிக்க முடியாதுதான். யார்தான் அதிகார பீடத்திலிருந்து தாமாகவே இறங்கியவர். இது ஒரு வகை சைகொலொஜி. இதனால் மற்றவர்கள் முன்னேறாது இருத்தல் வேண்டுமெனும் இராச தந்திரம். தடைகள், சூழ்ச்சிகள், போலி தத்துவ விளக்கங்கள் எனும் வகையில் வேலி அடைப்புகள். பொறாமை நான் மட்டும் வாழ்ந்தால் போதும் என திட்டமிட்டுத் தனித்தனமாகச் செயலாற்ற முற்படுவது. சமூக உணர்வு குன்றி ஒருவர் தோளில் ஒருவர் மிதித்தேறி வசதியாக வாழ முயலுகையில் ஏற்படும் போக்குகள். போட்டியில் சறுக்கி விழுந்தவர்களை சமூகம் கைவிட்டுவிடும். இதனால் 'நான் மட்டும்' எனும் அசிங்கமான போக்கு வேரூன்றி சமூக வாழ்க்கையை அழகற்றதாக்குகின்றது. ஆனால் இதற்கும் பல்கலைக் கழகக் கல்வி பற்றிய அவசியத்தின் ஆய்வுக்கும் என்ன தொடர்பு இருக்கின்றது? தடை செய்யப்பயன் படுத்தும் வாதம் விதண்டாவாதமாகவே இருக்கிறது.

பல்கலைக்கழகக் கல்வி ஒருவர் முன்னேறுவதற்கு உதவும் என்பதும், சமூகமும் நாடும் செழிக்க உதவும் என்பதும் உண்மையென நிலைநாட்ட வேண்டுமென்றால் அதற்குரிய ஆதாரம் தேவை. ஆதாரந்தான் இருக்குமென்றாலும் அதனை ஏற்றுக் கொள்வதென்பதும் அவசியந்தானா?

ஜீ. ஸி. ஈ 'ஓ' லெவல் முடிந்ததும் 'ஏ' லெவலில் மூன்று அல்லது, நான்கு வருடங்கள். பின்பு பல்கலைக் கழகத்தில் மூன்று. அல்லது நான்கு வருடங்கள் பட்டப்படிப்பு முடியும் கட்டத்தில் வயதும் இருபத்தைந்து தாண்டியிருக்கும். கண்ட மிச்சமென்ன? சாதித்ததென்ன? செலவென்ன?

உழைக்கும் வயது, ஆறேழு வருடங்களுக்கு மேலால் உழைப்பில்லை. அது மட்டுமா. வேறேதாவது உழைப்பில் செலவு. பெற்றோரென்றால் பாசமே காரணமென்று கூறிவிடலாம். கடமையென்றும் கூறிக்கொள்ளலாம். அல்லாவிடில் கடமைப்பட்ட நிலை. கடன் இளைஞரது தன்மானத்தைப் பாதிப்பதாய் விடும். ஆளுமைக்கும் பங்கம்.

மாணவராய் இருக்கும் போதுதான் நிம்மதியுண்டா? சோதனைக்கு மேல் சோதனை. வகுப்பறையில் படித்ததை அளவிடும் சோதனை. சக மாணவர்களோடு குறிப்பாக எதிர்பாலாரோடு ஏற்படும் தொடர்பில் சோதனை. பிரச்சனைகளைக் கண்டு மனம் தளராது நிற்பதும் சோதனை. உழைத்து வாழும் வாலிப இன்பத்தை இழந்த நிலை. பாலுணர்வுகளை அடக்கிக் கொண்ட பரிதாப நிலை; சமூகமும் இதனைப் பொருட்படுத்துவதாக இல்லை. இதனால்

சுற்றாடலினின்றும் அந்நியப்படுத்தப்பட்ட அவலம். ரென்ஷன் - இதுவே அன்றாட அனுபவம். இதனை மூடி மறைக்க பலவித ஸ்டண்டுகள் படிப்பில் கவனஞ் செலுத்துவதென்பது பாதிக்கப்படுகின்றது. செயல் திறன் குன்றும். இடையில் தடங்கலேதும் ஏற்படாமல் வெளியேறும் போது, உடல் நிலையும் சற்றுச் சோர்வடைந்ததாய், உளநிலையும் சாதாரண நிலையினின்றும் ஓரளவுக்குச் சற்று விலகியதாய் இருக்கும்.

செலவு தந்தைக்கு ஆயிரம். தீது தனக்குப் பல்லாயிரமென்றான் சுப்பிரமணியபாரதி. இது அறுபது வருடங்களுக்கு முற்பட்ட காலங்களில், இடையில் பணவீக்கம், சினிமா, ரெலிவிஷன் விளம்பரங்கள் மாணவர்களை தமது சுற்றாடலிலிருந்தே வேரறச் செய்கின்றது. இதனால் படித்தவன் தனது சமூகத்திலேயே அந்நியனாகின்றான்.

படிப்பும் முடிந்துவிட்டது: இனியென்ன வேலைதேடும் வேலை. இது, ஆறேழு வருடகாலம் உழைப்பதென்பது என்னவெனத் தெரியாது ஓரளவு மறந்த நிலை. ஒரு சிலருக்கு, சில சம்பிரதாயங்களைக் கையாண்டதனால் வசதியான வேலை வாய்ப்புக்கள், பலருக்கு, வாய்ப்புகளே எட்டவில்லை. எஞ்சியவருக்கு, ஸ்கேல் போடாத ஆசிரியர் தொழில், 1875 ரூபாய் 50 காசு மாதச் சம்பளம். வாழைப்பழம் வாங்கி விற்பவன் அதனைவிடப் பன்மடங்கு உழைக்கின்றான். அவன் 6ம் வகுப்பிலேயே பள்ளியினின்றும் விலகியவன்- படிப்பு ஏறாதவன் இதற்கிடையில் ஓமானுக்குச்சென்று தொழில் செய்ததனால் இரண்டு வீடும் கட்டிக்கொண்டான். அதே கிராமத்தில் பட்டதாரி ஆசிரியனைவிட அவனுக்கு மௌசு கூட.

கந்தசாமி ஒரு விவசாயி. இரண்டு ஆண் குழந்தைகளும், நான்கு பெண் குழந்தைகளும். மனைவி நோய்வாய்ப்பட்டு இறந்துவிட்டாள். இடையிடையே சினிமாப் படம் பார்த்ததனால் மூத்த மகனுக்குக் கமல்தாஸன் எனும் பெயரை வழங்கியிருந்தான். கமலைப் படிப்பிப்பதற்காக மற்றப் பிள்ளைகள் பள்ளிக்குப் போவதைத் தடுத்து தனது வெங்காயத் தோட்டத்திலேயே வேலைக்கு அமர்த்தினான் (இது வெறும் கற்பனைப் பாத்திரம். ஆனால் உண்மை) கமலும் என்ஜினியரிங் படிப்பை முடித்துக் கொண்டு பட்டணத்து கம்பனியொன்றில் வேலை செய்துகொண்டிருக்கையில் டாக்டர் அல்லது எஞ்சினியரொருவரையே காதலிக்க விரும்பிய பெண்ணை திருமணம் செய்து கொண்டு கனடாவுக்குக் குடிபெயர்ந்து சென்று விட்டான். கந்தசாமி புற்று நோய்க் காளாகி அரசாங்க ஆஸ்பத்திரியில் பல நாட்களாகத் தங்கியிருந்து மகனுக்குத் தந்திச்செய்தியனுப்பியும் கமல் வரவில்லை. அவனது மரணச் சடங்குச் செலவுக்கு மட்டும் பத்தாயிரம் ரூபாய் அனுப்பியிருந்தான். (இச்செய்தி கந்தசாமிக்கு எட்டியிருக்காது.)

கதையைச் சற்று மாற்றிக்கொள்வோமே. இதுவும் கற்பனைதான் ஆனால் உண்மை. மகன் கமல் கனடாவிலிருந்து மாதம்மாதம் ஐயாயிரம் ரூபாய் அனுப்பிக்கொண்டே வந்தான். இப்பணத்தில் ரூபாய் இருநூற்றைம்பதை மட்டும் தன் குடும்பத்துக்கென எடுத்துக் கொண்டு, மகன் பெயரில் வீடு கட்டுவதற்கென இரண்டு வருடகாலமாகச் சேமித்த பணத்தை சாராயக் கடைச் சோமன் துப்பாக்கியைக் காட்டிப் பறித்துக் கொண்டான். இவ்விதமாக ஏமாற்றப்பட்டவருக்கு பணமெதற்கு அனுப்ப வேண்டுமென மனைவி குறுக்கிட்டதனால், கமலும் பணம் அனுப்புவதை நிறுத்திக் கொண்டான்.

கல்வியைப் பற்றியும் நாட்டு நிலைமை பற்றியும் யதார்த்தத்தினின்றும் விலகாத இவ்வித கற்பனைக் கதைகளைக் கூறிக்கொண்டே போகலாம். முடிவிருக்காது. அவ்வாறிருந்தும் நாடு முன்னேற பல்கலைக்கழகக் கல்வி அவசியமெனச் சமூகம் கூறுகிறதே பெற்றோரும் பல்லாயிரக்கணக்கில் பணஞ்செலவு செய்கிறார்களே. ரியூட்டறிகளும், சிறு சிறு கூடாரங்கள் அமைத்து வியாபாரஞ் செய்கின்றனவே. நாட்டின் அரசியலிலும் இக்கல்வி என்பது முதலிடம் பெறுகின்றதே.

நிலைமை இவ்வாறிருக்க, புதிய மாண வனே! நீயும் பலத்த போட்டியில் பங்குபற்றி களைத்த நிலையில் பல்கலைக்கழகம் வந்து சேருகிறாயே. எதற்காக வருகிறாய்? கிடைக் கக் கூடிய பலனென்ன? இக்கேள்வியை உன் னைக் கேட்பதா? அல்லது உன்னை வழிநட த்த இருக்கும் பேராசிரியரைக் கேட்பதா? அல்லது, என்னிடமே நான் கேட்பதா? அல்லது நீ வாழும் சமூகத்தையே கேட்பதா? இங்குதான் மயக்கம் ஏற்படுகிறது.

புதிய மாணவரை வரவேற்கும் சந்தர்ப் பத்தை பயன்படுத்திக் கொண்டு இத்தனை காலமும் எனக்கெனத் தேடிக் கொண்ட சூழலையும், அங்கு நான் ஆற்றிய கருமங்க ளையும் திருப்பிப் பார்க்கிறேன். நான் கற் றது கைமண் அளவு. கற்க வேண்டியிருப் பது... கற்ற கல்வியும், வெறுமனே தகவல்க ளும் அவற்றை ஒழுங்கு செய்து நியாயப் படுத்தக் கூடிய பயிற்சியுமாயிருந்தது. நான் எனது எனும் மமதையை அடக்கி என்னையே உணர்ந்து படைப்பின் நோக்கத்தை அறிந்து, அதன் அழகையும் வாழ்ந்து ரசிக்கும் தீர்க்க தரிசியாகவில்லை. 'தனம் தரும் கல்விதரும் ஒரு நாளும் தனக்கு அறியா மனந்தரும் தெய்வ வடிவும் தரும்...' இதற்கு அவளது கடைக்கண்களே போதுமானது. இது என்னி டமில்லை. மாறாக கல்வி கற்றவன் என்றும் - குறிப்பாக ஆங்கில மொழியூடாக கல்வி கற் றவன் - எனும் மிடுக்கும், சேர்ந்து விட்டது. இந்நிலையில் கடைக்கண்களா! முழுக்கண்க ளைக் காட்டினாலும் மாணவர்களை நெறிப் படுத்திவிடலாமெனும் நம்பிக்கை என்னிட மில்லை.

முதியோர் இளம் சந்ததியினரைப் பார்த்து தம்மைவிட ஒழுக்கம் குறைந்தவ ரெனத் தீர்ப்புக் கூற முயலுவது வரலாறு கண்ட உண்மை. எங்க காலத்தைப் போல இல்லை என்பார்கள். (மறுபுறத்தில் அதே வாயால் உலகம் முன்னேறுகின்றது. என்பார் கள்). இதனை, உண்மையென ஏற்றுக் கொண்டாலும் இந்த இளைஞர்களைப் பயிற் றுவித்தவர்கள் 'யார்' எனும் கேள்வி எழு மல்லவா.?

## மழை

இருளை கிழித்து
பகலை புகுத்தி
தன்னை நிலை நிறுத்தும்
தரன்
பூமித்தாய் மேல் கொண்ட
அகோர காதலை
தெரிவிக்க
வெண் மேகங்களிடம்
தூதனுப்பிய போது
அவை பூமித்தாயின்
நீராவியெனும்
காதல் மடலைப் பெற்று
கருமேகங்களாய் மாறி
விண்ணில் பறந்திடும் போது
கொட்டும்
ஆனந்தக் "கண்ணீர்த் துளிகள்

கல்லடி எஸ். மோசேஸ்

## நீதி எங்கே? ? ?

நீதி எங்கே? நீதி எங்கே?
என்றேன் நிதிப்பிரிவில்
நீதி இல்லை நீதி கொழும்பில்
என்கின்றனர் அடிக்கடி
நீதி கொழும்பிலென்றால் இங்
கிருப்ப தநீதியா?

தான்தோன்றிக் கவிராயர்

# ஈழத்தின் முதல் தமிழ் நாவல்

சாம்பசிவம் தவமணிதேவி B. A. (HONS) M.L.I.S.
நூலகர், கிழக்குப்பல்கலைக்கழகம்.

ஈழத்தில் மேனாட்டார் தொடர்பினால் சமூகம், அரசியல், பொருளாதாரம், கலை கலாச்சாரம், பண்பாடு முதலிய துறைகளிற் பல தாக்கங்கள் ஏற்பட்டன. கலைத் துறையில் சிறப்பாக இலக்கியத்தில் அதன் உருவம், உள்ளடக்கம் போன்றவற்றில் மாற்றங்கள் ஏற்பட்டன. மரபு மரபாகப் போற்றப்பட்டுவந்த இலக்கியங்களில், மாற்றத்தை ஏற்படுத்தும் வகையில் சிறுகதை, நாவல் போன்ற புனைகதைகள் இறக்குமதி செய்யப்பட்டன. நாவல் இலக்கியம் 19ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தமிழ் நாட்டிலும், ஈழநாட்டிலும் தோன்றி வளர்ச்சி பெற்றது. தமிழ் நாட்டின் முதல் தமிழ் நாவல் 1879 ம் ஆண்டளவில், மாயூரம் வேதநாயகம் பிள்ளையினால் இயற்றப்பட்ட, பிரதாப முதலியார் சரித்திரம் என்பதை யாவரும் ஒத்துக் கொள்கின்றனர். ஆனால் ஈழத்து முதல் தமிழ் நாவல் எது என்பதில், இன்றுவரை ஒரு கருத்தொற்றுமை காணப்படவில்லையென்று கூறலாம். எனினும் அண்மைக் காலங்களில் நாவல் இலக்கிய ஆராய்ச்சி பற்றித்தோன்றிய நூல்களிலும், கட்டுரைகளிலும் சித்திலெவ்வை மரைக்காயரால் 1885ல் எழுதப்பட்டு, எஸ். எம். கமாலுதீனால் அறிமுகம் செய்து வைக்கப்பட்ட அஸன்பே சரித்திரம் ஈழத்தின் முதல் தமிழ் நாவல் என்று கூறப்பட்டுள்ளது.

அஸன்பே சரித்திரம் முதல் நாவல் என்பது கலாநிதி கைலாசபதியின் வானொலி மஞ்சரி (25. 2. 74) தி. ஆ. சிவநேசச் செல்வனின் ஈழத்தில், தமிழ் நாவல் இலக்கியம் சில குறிப்புகள், திரு. நா. சுப்பிரமணியத்தின் ஈழத்துத் தமிழ் நாவல்கள் - நூல் விபரப்பட்டியல், ஈழத்துத் தமிழ் நாவல் இலக்கியம் முதலியவற்றிற் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆகவே இதுவரையும் முதல் நாவல் எனக் கருதப்பட்ட, திருகோணமலையைச் சேர்ந்த இன்னாசித்தம்பி என்பவரால் 1891ல் எழுதி வெளியிடப்பட்ட ''உசோன் பாலந்தை'' கதை ஈழத்து முதல் தமிழ் நாவல் என்று கருதப்பட்ட நிலைக்கு மாறாக, இரண்டாம் இடத்தைப் பெறுகின்ற இவ் அஸன்பே சரித்திரம் கொழும்பு முஸ்லீம் நேசன் அச்சகத்தில், ''அஸன்பேயுடைய கதை'' எனவும், தமிழகத்தில் 'அஸன்பேயுடைய சரித்திரம்' எனவும் வெளியிடப்பட்டது. சரித்திரம் எனப் பெயர் மாற்றப்பட்ட முறையானது அக்காலப்பகுதியில் தமிழகத்தில் தோன்றிய பிரதாப முதலியார் சரித்திரம், கமலாம்பாள் சரித்திம், பத்மாவதி சரித்திரம் போன்றவற்றின் செல்வாக்கைக் காட்டுகின்றது.

இந்நாவலை நாவலாசிரியரின் அறிமுகம், காலப்பின்னணி கதைச் சுருக்கம், காலப்பின்னணி, நாவலின் முக்கிய அம்சங்கள் என்ற அடிப்படையில் நோக்கலாம். ஆசிரியர் சித்திலெவ்வை தமிழ், அரபு, ஆங்கிலம் முதலிய மொழிகளைக் கற்று மேலைத்தேய கலாச்சாரத் தொடர்புடையவர். பத்திராதிபராகவும், உயர்நீதி மன்ற நியாயவாதியாகவும் கடமையாற்றியவர். இவர் இஸ்லாம் மக்களின் விழிப்புணர்ச்சிக்குக் காரணகர்த்தாவாக இருந்ததுடன் மட்டுமல்லாது, சுதேச பண்பாட்டுத் துறையில் முன்னின்று, உழைத்தவராதலால் இஸ்லாம் மதக்கோட்பாடுகளையும், கலாச்சாரத்தையும் ஒரு மத்தியதரவர்க்கத்தார் மூலம் காட்ட முனைந்துள்ளமையினை அவர் நாவலில் காணக்கூடியதாக உளது. ஆசிரியர் இலங்கையராகக் காணப்படுகின்றாரேயொழிய நாவலின் தலைவனை மிசிறு எனும் நாட்டைச்

சேர்ந்தவனாகப்படைக்கின்றார்: அவன் வளர்ந்த இடம் இந்தியாவாக உளது; அவன் மிசிறு தேசத்து இராஜகுடும்பத்தைச் சேர்ந்தவன்; இவன் இளம்பிராயத்திற்கடத்தப்பட்டு வளர்ப்புப் பிள்ளையாக இந்தியாவில் வளர்கின்றான்; இடையில் இவன் செல்வத்தை அபகரிப்பதற்குப் பலர் முயன்றமையினால், இவனுக்குப் பல சோதனைகள் ஏற்படுகின்றன. ஆங்கிலேயர் தொடர்பும், ஆங்கிலப்பெண்மணி பாளினாவின் சிநேகமும் ஏற்படுகின்றன: சோதனைகளில் வெற்றி பெற்று இறுதியில் அவன் தன் சொந்தப் பெற்றோரை அடைந்து, இஸ்லாம் மதம் மாறிய பாளினாவை மணந்து, எகிப்து, லண்டன் முதலிய இடங்களில் வசிப்பதாகக் கதை வளர்ந்து முடிகிறது. இதுவே நாவலின் கதைச்சுருக்கம்.

நாவலின் காலம் அதன் தோற்றத்துக்கு ஒரு வாய்ப்பான இடத்தை ஏற்படுத்திக் கொடுத்தது. வியாபார நோக்குடன் வந்த, அந்நியர் சமயம் பரப்புதலிலும் ஈடுபட்டனர். இதனால் ஒவ்வொரு சமயத்தவரும் தத்தம் சமயத்தைப் பாதுகாக்க முற்பட்டதால், சமயப் போட்டிகள் எழுந்தன. இவ்வகையில் இஸ்லாம் மதமும் தம் பணியை மேற்கொண்டதென பிரதிபலிப்பினை அஸன்பே சரித்திரம் காட்டுகிறது. இத்துடன் ஏற்கனவே அறிமுகமாயிருந்த அச்சுயந்திர வசதி போன்றனவும், நாவல் இலக்கியத்திற்குச் சாதகமாகக் காணப்பட்டன.

நாவலின் முக்கிய அம்சங்களாகக் கதைப் பின்னணி, பாத்திர வார்ப்பு, பின்னணி, வர்ணனை, கலையம்சம் ஆகியவை கருதப்படுகின்றன. கதையில் ஒரு கட்டுப்பாடான இஸ்லாம் மத்திய வர்க்கத்தைக் காட்ட விளைந்த ஆசிரியர், அதை வளர்த்துச் செல்லும் நிகழ்ச்சிகள் மூலம், வாசகரைக் கவர வைக்கிறார். அஸனைக் கடத்தியது மட்டுமல்ல. அவனைக் கொல்ல முயலும் முயற்சி அதனின்றும் தப்பி, காளைமாடு, கள்வர் கூட்டம் முதலியவற்றில் அகப்பட்டுத் துன்புறுதல் பெற்றோரைக் காணமுடியாதளவுக்குச் சோதனை மேல் சோதனையாகப், பலவித துன்பங்கள் ஏற்படல். இத்தகைய துன்பங்கள் ஏற்பட்ட போதும், சகிப்புத் தன்மையுடன் பொறுமையாகவும், புத்திசாதுரிய முடையவனாகவும் அஸனை வழிநடத்துகிறார். இடையிடையே துணைக் கதைகளைப் புகுத்தினாலும், அவையும் மையக் கதையுடன் இணைந்து போவதால் நாவல் வளர்ந்து செல்கிறது எனலாம்.

முரண்பட்ட குணாம்சங்களையுடைய பாத்திரங்களை அறிமுகப்படுத்தி அவற்றை மோதவிடுகின்றார். பல வசதிகள் பெற்றும் பலவற்றை அனுபவிக்க வாய்ப்பிருந்தும், அவற்றை அளவோடு அனுபவித்தும் துன்பங்களைச் சகித்துக்கொள்ளும் சமயப்பற்றும் செயல் வீரனை அஸன் நண்பனுக்காகக் கொலைக் குற்றப்பட்டம் பெறும் அவன் நண்பன் காசீம், பெண்மைக்கேயுரிய இலட்சணங்களுடன் துலங்குபவளும், பாத்திமா என்ற பணிவிடைக்காரிக்கு இஸ்லாம் ஒழுக்க நெறிக்காக கூறும் காசீம் தங்கை மைமூனா, அதே தன்மை கொண்ட இவள் தோழி ஜுலைகா, கற்பை இழந்தபின்னும் அதைத் தங்கை ஜுலைகாவில் சுமத்திவிட்டு நெறிகெட்டு வாழும் ஜீகறாபெற்ற பிள்ளையினை இழந்து வேறு ஒரு பிள்ளையினை வளர்க்கும் அஸன்பெற்றோர், தன் உயிரையும் தூச்சமாகமதித்து காளை மாட்டினின்று தன் உயிரைக் காப்பாற்றிய அஸனை காதலித்து பின் மதம் மாறி அவனைத் திருமணம் செய்யும் ஆங்கிலப் பெண்மணி பாளினா எனும் அமீனா, இவ்வாறு சமூகத்தின் பல்வேறு படித்தரங்களையுடைய பாத்திரங்களை அறிமுகப்படுத்துவதால் நாவலில் ஒரு முழுமைத் தன்மையினைக் காணக்கூடியதாக உளது. ஆசிரியரின் பாத்திர வார்ப்பு குறிப்பிடக் கூடியதாயினும் பொருத்தமற்ற செய்திகள், வருணனைகள், ஆசிரியர் தலையீடு என்பன நாவலின் பின்னணியைப் பலவீனப்படுத்திவிடுகின்றது; சீர்திருத்தம் உபதேசம் முதலியன நேரடியாகவோ மறைமுகமாகவோ நாவலிற் காட்டப்பட்டுள்ளது. ஒரு இலக்கிய ஆசிரியன் தன்

கருத்தைப் பாத்திரங்கள் வாயிலாகவோ, தன் கூற்றாகவோ, நிகச்சிகள் வாயிலாகவோ கூறுவது இயல்பான ஒன்றாகும்.

மேலைத்தேயப் பண்பாட்டினால் அஸன் கவரப்பட்டு, அதில் பரிச்சயமாகியபோதும் நாள்தோறும் ஐந்து வேளைகளிலும் தொழு வதிலோ குர்றான் ஓதுவதிலோ தவறுவதில்லை. எத்தகைய அழகவாய்ந்த பெண்களைக் கண் டாலும் காமக் கண்ணோடு பார்க்காது, சகோதரிபோலப் பார்க்க வேண்டும் என அஸன் நடவடிக்கை மூலம் மற்றவர்க்கும் புகட்டும் ஆசிரியர்திறன் சிறப்பானது. பாளினா மதம் மாறி இஸ்லாம் மத ஒழுக்கங்களில் ஈடுபட்ட பின்பே அஸனும், அமீனாவும் ஒன் றுபடுகின்றனர். இந்நிகழ்ச்சி மூலம் ஆசிரியரின் இஸ்லாம் மதத்திலுள்ள பக்தி வைராக்கியம் வெளிப்படுத்தப்படுகிறது. மேலைத்தேச கலாச்சாரத்தை ஆதரித்த ஆசிரியர் இந் நாவல் மூலம் பழமையில் காலூன்றிப் புது மைக் கருத்தை வரவேற்கிறார் எனலாம்.

காவிய மரபிலிருந்து அடுத்த நிலையில் அதன் தாக்கத்தை முதல் நாவலிலும் காண் பது எதிர்பார்க்கக் கூடியதே. முக்கியமாக இந் நாவலில் வரும் மைமூன், பாளினா, ஜுலைகா, ஆயிஷா முதலிய பெண்கள் பல வித வருணனைக்குள்ளாகின்றனர். நாவலின் கலையம்சத்தை நோக்கும்போது ஆசிரியரே இங்கு கதை கூறுவதால், "அதையுமிங்கும் சொல்கின்றோம், இன்னும் சொல்கின்றோம், பெண்களுக்கு நாம் சொல்லுகிற உபதேசமா வது என வரும் இடங்களில் ஆசிரியரின் நேர டிக் கூற்றுக்கள் நாவலின் கதை ஒட்டத்தைத் தடைப்படுத்துகிறது. மேலும், நாவலில் இயல்பான பேச்சு வழக்கு நடையினைக் காணமுடியவில்லை. எனினும் பாத்திரம் பற்றி வரும் இடங்களில் அப்பாதகன், அக்கொடுமதி யான், உலுத்தன் போன்ற சொற்பிரயோகங் கள் பேச்சு நடையினைக் கையாள முயன்ற மையினைக் காட்டுகிறது. கதை சொல் அம் முறை, இராசா இராணி கதை கூறும் முறை போன்றது எனினும் ஆரம்பகால நாவல்களில் இத்தன்மை தவிர்க்க முடியாது இடம் பெற்றது.

நாவலிற் காணப்படும் திடீர்த்திருப்பங்கள், சிலமர்மமான செயல்களும், மர்மநவீனத்தின் சாயலையும் காட்டுகிறது. ஆசிரியர் தலையீடு காவியப்பாங்கான வருணனை, உபதேசம் முதலியன காணப்பட்டபோதும் நூல் எழுந்த காலத்தை கருத்திற் கொண்டே அதை நோக்க வேண்டும். இந்நூல் எழுந்து ஏறக்குறைய 100 ஆண்டுகள் கடந்துவிட்டன. இன்றைய நிலையில் நாவல் இலக்கியத்தின் வளர்ச்சிக் கட்டங்களும், அதுபற்றிய விமர்சனங்களும் அநேகம் எனலாம். ஆகவே இக்காலக்கண் ணோடு நோக்காது, முதல் நாவல் என்ற நிலை யில் வைத்து நோக்கும்போது இந்நாவல் திரு. தோத்தாரி கூறும் நடப்பியலுக்கு ஒத்த இயல்புடையதாக உளது. இதனால் இது தமிழ் நாவல் வரலாற்றில் முதல் நாவல் என்றும் கூறிக்கொள்ளலாம். இது 20ம் நூற் றாண்டின் முற்பகுதியில் தோன்றிய சிங்கள நாவல் இலக்கியத்திற்கும், முற்பட்டதாக இருப்பதோடு, ஒரே தொடர்கதையாக உபத லைப்போ, அத்தியாய எண்ணோ இன்றி எழுதப்பட்டுள்ளது. இவ்வகையில் பின்தோன் றியவற்றுக்கும் ஒரு வழிகாட்டியாக இருக்கும் தன்மையும் பெற்றுள்ளது எனலாம்.

## புருஷன்

வடமொழியில் புருஷன் என்றால் 'ஆத்மா' என்று அர்த்தம் கணவன்தான் மனைவியினுடைய 'ஆத்மா' என்பதால்த்தான் அவனைப் 'புருஷன்' என்று அழைத்தார்கள்.

தொடர் கதை

# மெழுகுவர்த்தி எரிகின்றது!

— முத்துமாதவன் —

சந்தணக்குளத்துக்கும், பட்டணத்துக்கும் இணைப்பை உருவாக்கிய தோணிகள் வெகு விரைவாக ஒன்றை ஒன்று முந்திப் போவதும் வருவதுமாக இருந்தன! அது ஒரு மழைக்காலம் ஆறு பொங்கி நுரையை கரையின் இரு பக்கங்களிலும் கக்கிக் கொண்டு இரைந்தபடி மிக அவசரமாக ஓடிக் கொண்டிருந்தது' அக்கிராமத்திற்கு சந்தண ஆறு என்று பெயர் வைத்திருக்கலாம். ஏனோ? குளம் என்றே அழைக்கப்பட்டது. ஆற்றை பயந்து பயந்து கடந்து விட்டார். ஒரே பச்சைப் பசேல் தான் கண்கள் குளிர்ந்து விடும் காட்சிகள். நெல் வயல்களும், நீண்ட தென்னை மாதத் தோப்புகளும், வாழை, கமுகு, முந்திரிகை தோட்டங்களும், மா, பலா, வகைகளும் காய்த்துப் பழுத்து! அட...டா! என்ன இனிமை! என்ன அழகு! நீண்டு பரந்த வயல் வெளிகள் தோறும் உழவர்களின் உற்சாகமான தெம்மாங்குப் பாட்டும், குயிலின் குரலின் இனிமைக்கேற்ப நாட்டியமாடும் மயில்களும், அந்த இயற்கை வனப்பின் அற்புதத்தை ஒரு தரமான கவிஞனால் மட்டுமே வர்ணிக்க முடியும். கிராமிய கலாசாரங்களோடு எதைப் பற்றியுமே கவலைப்படாமல், உழைப்பும், வாழ்வுமாக அந்த மக்கள் காலத்தைக் கடத்தினர். கால் நடைகளை, மரக்கறி வகைகளை, நெல் தானியங்களை பட்டணத்தில் விற்பதும், சாமான்கள், உடுப்பு, நகைகள் வாங்கி தமது தேவையை பூர்த்தி செய்வதுமே அன்றாட நிகழ்ச்சியாக இருந்து வந்தது. கல்வியோ? அறிவோ? அங்கே தேவைப்படவுமில்லை, அதற்கு அங்கே நேரம் இருக்கவுமில்லை. இரண்டொரு பணக்காரப் பிள்ளைகள் மட்டும் பட்டணத்தில் விடுதிகளில் தங்கி படித்து வந்தன.

பஸ்சை விட்டு இறங்கிய கல்யாணி, அக்கரைக்கு புறப்பட்ட தோணியொன்றில் பயந்து கொண்டே ஏறினாள். என்றாலும், அவள் தன்னம்பிக்கையை விடவில்லை! சரி போய்த்தான் பார்ப்போமே! இவர்களும் மனிதர்கள்தானே! மனிதன் நினைத்தால் நடக்காதது ஒன்று இருக்கிறதா? என திடம் கொண்டாள். நீரலைகளை அறுத்துக் கொண்டு தோணி, காற்றைப் பிளந்து ஓடியது. தோணி ஓட்டிய கிழவன்! இவளை ஒருவித மதிப்போடு பார்த்தான்: 'தங்கச்சி' எங்க போறீங்க?... என்றான். தோணி ஓட்டத்தின் அழகை அள்ளிப் பருகி, ஆற்றின் பரந்த விரிப்பில் துள்ளி விழுந்த மீன்களை தேடிய, பறவைக் கூட்டத்தின் லாவகத்தையும், ரசித்துக் கொண்டிருந்த கல்யாணி ஒரு கணம் திரும்பி தன்னைத்தான் கேட்கிறான் என்பதைப் புரிந்து கொண்டு, 'சந்தணகுளத்துக்கு' என்றாள் புன்முறுவலோடு. சிறுகுடை, பை, புத்தகங்களையும் நோட்டமிட்டு, 'நீங்க டீச்சரா?' என்று தயங்கியபடி கேட்டான்: 'ஆம்' என்பதைப் போல தலையை ஆட்டினாள் கல்யாணி.

கிழவன்! வாயெல்லாம் பல்லாகினான்: 'அம்மா'... அந்தப் பள்ளிக்கு நான்தானம்மா 'வாச்சர்' பகல்ல தோணி ஓட்டிட்டு இரவில காவலுக்கு போவன்!... ஏம்மா! நீங்க மட்டும் தனியேவா! வாரீங்க' என தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டு கேட்டான் கிழவன். தகவல் சேகரிக்க யாராவது கிடைக்க மாட்டாங்களா? விசனித்திருந்த கல்யாணிக்கு, கிழவன் பள்ளிக்கூட 'வாச்சர்' என்றதும் புதுத்தெம்பு பிறந்தது: 'ஆ...! வசதியாகி விட்டது. ஐயா!... நான் தனியே தான் வாரன்! இண்டைக்கு பள்ளிக்கூடத்தை ஆரம்பிக்க வேண்டும்... அதுதான்...' என்று இழுத்தாள் கல்யாணி. இளங்காலை வெயில் நீரில் விழ நீர் கண்ணாடியாகி கண்களைக் கூச வைத்தது. சத்தம் போட்டுச் சிரித்தான் கிழவன். 'தங்கச்சி என் பேரு மாமாங்கம்! மூணுவருஷமா 'வாச்சரா'க இருக்கிறேன்,

அம்மா வாச்சர் என்றால் அரசாங்க சம்பளம் கிடைக்கும் என்று யோசிக்காத... நான் 'கௌரவ' வாச்சர் என்று பீடிகை போட்டான் மாமாங்கம்! புரியாததால் விழித்தாள் கல்யாணி.



''என்னம்மா! முளிக்கிறே! என்வீடு பள்ளிக்கு முன்னால இருக்கு. அந்த வீட்டுல மகளுக்கு கலியாணம் முடிச்சி குடுத்திருக்கேன், என் பொஞ்சாதி செத்துட்டா! தனிக்கட்டை! இரவில பள்ளிக்கூடம்தான் எனக்குத் தஞ்சம்'' என்று மீண்டும் சிரித்தான் மாமாங்கம். மாமாங்கத்தின் வெகுளிப் பேச்சில் புன்னகைத்தாள் ''கௌர''வத்தின் பொருள் விளங்கிற்று. எதிர்த் திசையில் வந்த தோணிகளின் பிரயாணிகளான கிராமத்து மக்கள், தமது ஊருக்கு சென்று கொண்டிருக்கும் புதுப் பெண்ணை கேள்விக்குறியோடு பார்த்தபடி சென்றனர். மேலும் மாமாங்கமே தொடர்ந்தார்,...''பிள்ளைகள் படிக்கிறது மிகக்குறைவு முன்பிருந்தவாத்தியார், கண்டிப்பான பேர் வழி, அதனால பயத்துல இருபதுமுப்பது பேர் படிச்சுதுகள். அவர் நல்லா கஷ்டப்பட்டார். கடைசியில ஒரு நாள் இந்த ஆத்துல தவறி விழுந்துதான் செத்தாரு. நல்ல மனுஷன்...... அனாதைப்பிள்ளையளுக்கு நல்லா உதவி செய்தாரு! இப்போ யாரும் உதவி செய்யாத நிலையில அவரோட பிள்ளைகள் அனாதையா நிக்குதுகள்.'' விசுவாசக்கண்ணீர் வெளிக்கிட்டு வந்தது,. செத்துப் போன வாத்தியாருக்காக அவன் தலைதாழ்ந்து! தண்ணீரை ஒருமுறை பார்த்துக் கொண்டது.

சிறு, சிறு, நீர்ச்சுழிகளைப் பிரசவித்த வாறு அமைதியாக ஆற்று நீர் ஓடிற்று! செத்துப் போன வாத்தியாரை தண்ணீருக்குள் தேடுவதைப் போல கல்யாணி, நீரை ஊடறுத்துப்பாத்தாள். இருவருக்கும் இடையில் மௌனம் சோகத்திரை ஒன்றைப் போட்டு விட்டது.

தோணி கரைதொட்டதும் கல்யாணி இறங்கினாள். ''தங்கச்சி நில்லும்மா'' நானும் வர்றன் மழையும். வருகுது போல இருக்கு எனக்கு ஒத்துக்கொள்ளாது. 'என்றபடி தோணியை இழுத்து' ஒருமரத்தில் கட்டி விட்டார். கல்யாணி துணை கிடைத்த சந்தோசத்தில்...தோணிக்குரிய காசை நீட்டினாள்.. வாங்க......என்றபடி முன்னே நடக்க, முந்தானையால் உடலை மூடியவாறு மாமாங்கத்தைப் பின் தொடர்ந்தாள்.

சாமான்களோடு கிராமத்தை நோக்கிப் புறப்பட்ட மாட்டு வண்டியில், இருவரும் ஏறிக் கொண்டனர். அவள் வசதியாக அமர சாக்குகளை போட்டுக் கொடுத்தார் மாமாங்கம்.

குடையை விரித்துப் பிடித்துக் கொண்டாள் கல்யாணி. வண்டிக்காரனிடம் கல்யாணியைப் பற்றிச் சொன்னார் மாமாங்கம். 'வண்டியை விரட்டுப்பா! பள்ளிக்கு அவ நேரத்தோட போகணும்' என்றாள். அவ்வளவு தான் வாலைக் கிளப்பிக் கொண்டு நாலு காலில் பாய்ந்தது மாடு, எலும்புகள் அத்தனையும் நொறுங்கி விடுவதைப் போல குலுங்கி வலித்தது உடம்பு. கல்யாணி பல்லைக் கடித்துக் கொண்டாள்...

(தொடரும்)

# கிரிக்கட் விளையாட்டில் வேகப்பந்து வீச்சின் மகிமை

**Jebanesan Canagasabey**
உடற்கல்வி போதனாசிரியர் கிழக்கு பல்கலைகழகம்;

சர்வதேச கிரிக்கட் ஆட்டங்களில் வேகப் பந்து வீச்சாளர்களின் சேவை அளப்பரியது. அவர்களின் தோற்றமும், தோற்றத்திற் கேற்ப பந்து வீச்சு வேகமும் எதிர்த்தரப்பினரை அதிலும் விசேடமாக ஆரம்பத்துடுப்பாட்ட வீரர்களைத்திணறவைப்பது நம் அனைவரும் அறிந்ததே!

இவ்வரிசையில் கடந்த காலங்களில் மேற்கிந்திய அணியைச் சேர்ந்த வீரர்களான Michael Holding. Vanburn Holder, Joel Garner (பிக்பேட்) Andy Roberts, Wayne Daniels இங்கிலாந்து அணியைச் சேர்ந்த Harrold Larwood, Frank Tyson (டைபூண் - டைஸன் Fred Trueman, John Snow, Bob willis அவுஸ்திரேலிய அணியைச் சேர்ந்த Jeff Thomson, Dennis Lillee போன்றோரும் தற்போது பாகிஸ்தான் அணியைச் சேர்ந்த Wassim Akram, Waqar Younis தென் ஆபிரிக்க அணியைச் சேர்ந்த Allan Donald, Bret Shultz மேற்கிந்திய அணியைச் சேர்ந்த Curtly Ambrose, Conrtney Walsh போன்றோரும் முன்னணியில் திகழ்கின்றனர். எனினும் உலக நாடுகளுடன், ஒப்பிடும் போது வேகப்பந்து வீச்சாளர்களுக்கு இலங்கையில் பற்றாக்குறை நிலவுகிறது. "A Sportsman is born and not made' எனும் கூற்றிற்கமைய பிறப்புரிமையியல் ரீதியில் பெற்றோரின் தோற்ற அமைப்பு பலம் குன்றிய எச்சங்களாக பிரதிபலிப்பதே இதற்கான காரணமாகலாம்.

இலங்கையில் கிரிக்கட் ஆடுகளங்கள் கூட சுழல் பந்து வீச்சாளர்களுக்கு சாதகமாக அமைக்கப்படுவதன் இரகசியம், மேற்கூறிய பலவீனம் என்பது எல்லோரும் அறிந்ததே. சர்வதேச வேகப்பந்து வீச்சாளர்கள் கூட இலங்கையில் மிகத் திறம்பட பந்து வீசுவதற்கு இவ்வகை ஆடுகளங்கள் பெரும் பிரச்சனையாக உள்ளது; அண்மையில் இந்திய அணியின் சகலதுறை ஆட்டக்காரர் Kapildev, தென் ஆபிரிக்க அணித்தலைவர் KepplerWessels, தற்போது மேற்கிந்திய அணித்தலைவர் Richie Richardson போன்றோரும் எமது நாட்டில் அளித்த பேட்டிகளில் ஆடுகளங்கள் தொடர்பாக கண்டனம் தெரிவிக்கப்பட்ட செய்திகள் எமது பத்திரிகைகளில் வெளியாகி உள்ளன. ஒரு சந்தர்ப்பத்தில் இலங்கை அணியின் தலைவர் Ajruna Ranatunga விடம் எமது பேட்டியாளர்கள் இது சம்பந்தமாக வினாவிய போது அவர் அதனை சாதுரியமாக சமாளித்தார். அவர் மேலும் சிங்களத்தில் கூறியதாவது. எமது இளம் வீரர்களை ஊக்குவிக்க இவ்வகை ஆடுகளங்கள் அதிகம் பேணப்படல் வேண்டும். விசேடமாக Ruwan Kalpage, Muththiah Muralitharan போன்றோருக்கு இது சாதகமாக அமைவதால் எமது அணி வெற்றி பெறலாம்.

இலங்கையின் கடந்த கால சரித்திரத்தை எடுத்து நோக்கும் போது நாலந்தாக் கல்லூரி மாணவன் Sonny yatawara பல துடுப்பாட்டக்காரர்களை வைத்தியசாலையில் அனுமதிக்கச் செய்தது அவரது அதிவேக பம்பல் பந்துகளாலாகும். மேலும் இவர் மேற்கிந்திய அணித்தலைவர் Sir Garfield Sobersஐபோல்ட் செய்து ஆட்டமிழக்கச் செய்தவராவர். இவ்வரிசையில் தேர்வாளர்கள் தற்போது இடது கை வேகப்பந்து வீச்சாளர் Chaminda Waasஐ அணியில் சேர்த்துக் கொள்ள அரும்பாடு படுகின்றனர். இவரது வேகப்பந்து வீச்சை தற்போதைய மேற்கிந்திய கிரிக்கட் அணியின் முகாமையாளர் David Holford, He is a man of class எனக் குறிப்பிடுகிறார். இவர்கள் நமக்கு ஒரு வரப்பிரசாதமாக அமைகின்றன.

மேலும் சர்வதேச கிரிக்கட் அணித்தலைவர்கள் வேகப்பந்து வீச்சாளர்களின் முதற்சில ஓவர்கள் (Overs) முடிவடைந்த பின் சுழல் பந்து வீச்சாளர்களையும் மத்திய, தர வேகப் பந்து வீச்சாளர்களையும் அறிமுகப் படுத்துவது வழக்கமாகும். அதாவது வேகப்பந்து வீச்சாளர்களுக்கு. நீண்ட ஓய்வு கொடுத்து பின்னர் மீண்டும் புதிய பந்து (New Ball) அவர்கள் கையில் ஒப்படைக்கப்படுகிறது. Bob Willis இதனை 'இரண்டாவது சூறாவளி என தமது புத்தகத்தில் குறிப்பிடுகிறார். அணித்தலைவர்கள் வேகப்பந்து வீச்சாளரிடம் வைத்திருக்கும் நம்பிக்கையை இது எடுத்துக் காட்டுகிறது.

எந்த ஒரு வேகப்பந்து வீச்சாளரிடமும் முழுமையான பந்து வீச்சு நுட்பங்கள் காணப் படுவதில்லை: ஆனால் ஒவ்வோர்வேகப்பந்து வீச்சாளரிடமும், காணப்படும் சிறப்பியல்புகளை Dennis Lillee தமது புத்தகத்தில் இவ்வாறு குறிப்பிட்டு உள்ளார்,

1) Wes Hall இன் மூச்சுவாங்கும் ஓடுவேகம்.
2) Ray Lindwall இன்பட்டுப் போன்ற ஒழுங்கமைக்கப்பட்ட பந்து வீச்சு.
3) Jeff Thomson இன் கோர வேகம்:
4) Allan Donald இன் பல்திசை நுட்பம்:
5) John Snowஇன் சாதுரியமான திசை திருப்பம்.
6) Charlie Griffith கொல்லும் பம்பர் வீச்சின் சூத்திரதாரி.
7) Andy Roberts யோக்கர் பந்தின் (Yorker) மன்னன்.
8) MikeProctorஇன்சளையாத உடல்வலிமை:
9) Fred Trueman இன் அனல் வேகம்:
10) Brian Stathamஇன்குறி தவறாப்பந்துவீச்சு

இச்சிறப்பியல்புகள் அனைத்தையும் கொண்ட ஒரு வேகப்பந்து வீச்சாளர் எதிர் காலத்தில் உருவாகவும் சாத்தியமில்லை:

## வேகப்பந்து வீச்சாளர்களின் சாதனைகள்

| பெயர் | டெஸ்ட் ஆட்டங்களின் எண்ணிக்கை | வீசிய பந்துகளின் எண்ணிக்கை | கொடுத்த ஓட்டங்களின் எண்ணிக்கை | வீழ்த்திய விக்கற்றுக்களின் எண்ணிக்கை | சராசரி |
|---|---|---|---|---|---|
| 1. DENNIS LILLEE | 32 | 8791 | 4017 | 171 | 23.49 |
| 2. JEFF THOMSON | 22 | 5083 | 2607 | 103 | 25.31 |
| 3. GRAHAM MCKENZIE | 60 | 17604 | 7328 | 246 | 29.79 |
| 4. ANDY ROBERTS | 25 | 6472 | 3087 | 122 | 25.30 |
| 5. MICHAEL HOLDING | 13 | 2909 | 1348 | 57 | 23.64 |
| 6. WAYNE DANIELS | 05 | 788 | 381 | 15 | 25.40 |
| 7. JOHN SNOW | 49 | 12027 | 5387 | 202 | 26.67 |
| 8. CHRIS OLD | 33 | 6024 | 3032 | 102 | 29.72 |
| 9. MIKE PROCTER | 07 | 1514 | 616 | 41 | 15.02 |
| 10. BOB WILLIS | 29 | 5457 | 2746 | 105 | 26.15 |

## வேகப்பந்து வீச்சாளர்களின் பந்து வீச்சு வேகங்கள்

| பெயர் | பந்து விடுவிக் | [illegible]ப்படும் வேகம் | [illegible]டுப்பாட்ட காரரை | பந்து அடையும் வேகம் |
|---|---|---|---|---|
| 1. JEFF THOMSON | 160.45கிமீ.ம | 99 70மைல்/மணி | 129.92கிமீ மணி | 80.73 மைல்/மணி |
| 2. ANDY ROBERTS | 150.67 " | 93.62மைல்/மணி | 129.89 " மணி | 80.71 மைல்/மணி |
| 3. MICHAEL HOLDING | 148.54 " | 92.30மைல்/மணி | 122.74 " மணி | 76.27 மைல்/மணி |
| 4. DENNIS LILLEE | 139 03 " | 86.39மைல்/மணி | 115.92 " மணி | 72.03 மைல்/மணி |

(இதன் தொடர்ச்சி 14ம் பக்கம் பார்க்க.)

# உறவு என்னும் உலகங்கள் நீ தந்தது......

## 10. மனதில் கொண்ட ஆசைகளை......

தினைத்துணை நன்றிசெயினும் பனைத்துணையாக்
கொள்வர் பயன் றெறிவார் (செய்ந்நன்றியறிதல்)

காந்த்

இலங்கை திரும்பிய ராதாவுக்கு' பல வரவேற்பு,கௌரவிப்பு நிகழ்ச்சிகள் காத்திருந்தன முடிந்த ஒரு சிலவற்றில் மட்டும் கலந்து விட்டு சொந்த மண்ணை நோக்கிப்பயணமானாள். முதலில் தான்குடியிருந்த இடத்தைப் பார்க்கச் சென்ற அவளால் அதை நம்பமுடியாதவாறு பற்றைக் காடாகக் காட்சிதந்தது.அடுத்து கதிரமலையின் மாளிகைக்குச் சென்றாள். கண்ட இடமெல்லாம் வேலைக்காரர் திரியும் அந்மாளிகை,எதுவித சந்தடியுமின்றி அமைதியாதகக் காட்சியளித்தது. வீட்டுக்கதவு இலேசாக சாற்றப்பட்டிருந்தது. வீட்டுக்கதவைத் தட்டிய ராதா ''ஐயா!'' ''ஐயா!'' என்று கூப்பிட்டாள். எதுவித பதிலுமில்லாததால் கதவைத் திறந்து கொண்டு உள்ளே நுழைந்தாள். எங்கும் ஒரே தூசும், ஒட்டறையுமாகக் காட்சியளித்த, அந்த விசால மண்டபத்தின் ஒரு மூலையிலே ஒருவர் கட்டிலில் படுத்துக் கொண்டிருந்தார். இருமலும், முனகலும் இலேசாகக் கேட்டதால் ராதாவுக்கு அவரை நெருங்க ஒரு தென்புவந்தது: ''ஐயா'' ''ஐயா!'' என்று அவரைத் தட்டி எழுப்பினாள். 'நீ யாரம்மா?' ''உனக்கு என்ன வேணும்?'' என்று அடித் தொண்டையால் கேட்டார் அவர். ''ஐயா நான் ராதா உங்க வீட்டில வேலை செய்த தணிகாசலத்தின் பெறாமகள். உங்க மகன்கூட என்னுடன்தான் படித்தவர். ''ஓ! நீ அந்த தணிகாசலத்தின் மகளா! ஆ! ரொம்ப நல்லது'' ''நீ இப்ப என்னம்மா செய்யிற?'' என்றார் அவர். ''ஐயா, நான் லண்டனில படிச்சு பட்டம் எடுத்து விட்டு இங்க சேவை செய்யிறதுக்காக, வந்திருக்கிறன்'' என்றாள் ராதா''நீ கொடுத்து வச்சவ''என்று சொன்ன அவர் 'அந்தக்கதிரையை இழுத்துப் போட்டு உட்காரம்மா உன்னோட நிறையப் பேசணும்' என்றார், ''ஐயா உங்களுக்கு எவ்வளவோ பணமிருந்தும் உங்களைக் கவனிக்க...''என்று ராதா கூறும் போதே ''ஒரு காலத்தில பணம் இருந்ததுதான்; இப்ப அப்படி இல்ல, தொழிலில நஷ்டம் ஏற்பட்டதால இருந்த சொத்தெல்லாம் வித்தாச்சு இந்த வீடு மட்டும்தான் மிச்சம். அதால சொந்தக்காரங்க எவருமே இந்தப்பக்கம் வாறதில்ல.போன வருஷம்தான் என்ட மனைவியும், கண்ணை மூடிட்டாள், அதுக்குப்பிறகு நான் தனிய...'' என்று சொல்லும் போதே அவர் கண்கள் குளமாகிவிட்டன. ''உங்க மகன்'' என்று ராதா சொன்னதும் ''அவனா என்ட மகன்?'' என்று வீராப்புப்பேசிய அவர் ''அவன் துரோகி! போக்கிரி! சொந்த அம்மா இறந்தற்கே வராதவன்! அவன் இனி இங்க வரக்கூடாது,'' என்று கத்தினார். 'ஐயா! கொஞ்சம் பொறுமையா' என்று ராதா கூற ''அந்தப் பொறுக்கி யாரோ ஒருத்தியைக் கலியாணம் செய்து சந்தோசமா இருக்காமே! என்றார் ''ஐயா! உங்க மகன் ரொம்ப நல்லவர். எனக்குக்கிடைச்சிருக்கிற பட்டம் எல்லாம் அவரால் தான்,'' என்று தன் பழைய வரலாற்றை சொல்லித்தீர்த்தாள் ''அவன் எனக்கு மட்டுமல்ல உனக்கும் செய்தது துரோகம் அம்மா'' என்று வாய் விட்டுக் கத்திய அவர் ''அம்மா'' என்று நெஞ்சைப் பொத்தினார், ''ஐயா'' உங்களுக்கு என்ன? ''என்று ராதா பதட்டத்துடன்கேட்க 'அம்மா அந்தப் போத்தலில இருக்கிற மாத்திரைய எடுத்துத்தா' என்றார் அவர். மாத்திரைகளை ப்போட்டு நீரும் பருகிய பின்புதான் அவர் பழைய நிலைக்கு மீண்டார்.

'அம்மா! இந்த இருதயவலி இரண்டாவது தடவையா வந்து விட்டது; என்ட வீட்டுக்கு வந்த உனக்கு நான் தண்ணி கூடத் தரல்ல. நீ எனக்கு உயிரையே தந்துட்டா' என்றார் அவர்; 'ஐயா! நான் அப்படி பெரிசா ஒண்டுமே செய்யல்லியே' என்றாள்.

ராதா: 'அம்மா! நீ மஞ்சள் குங்குமத்தோட மகாராசியா வாழனும்! உனக்கு நான் ஒரு பரிசு தரப் போறன். மறுக்காம ஒத்துக்கனும்! என்று தன் கழுத்தில் கிடந்த தங்கச் சங்கிலியைக் கழற்றி ராதா கழுத்தில் போட்டு, 'அம்மா! இது சாதாரண தங்கச் சங்கிலி இல்ல! எங்கள் பரம்பரைச் சின்னம் எனக்குப்பின் இதை அணிய எவருமே இல்ல! நீ இப்ப எனக்கு மகள் மாதிரி' என்றார். மணிக்கூட்டைப் பார்த்த ராதா, தனக்கு ஒரு அலுவல் இருப்பதை உணர்ந்து 'ஐயா நாளை நான் உங்களை வந்து சந்திக்கிறேன்' என்று கூறிவிட்டு சென்றாள்.

மறுநாள் அவள் அங்கு சென்ற போது வாசலில் டாக்டரும், இன்னும் சிலரும் நின்று கொண்டிருந்தனர். டாக்டரின் முகத்தை நோக்கிய ராதாவுக்கு சிந்தனை பல வருடங்கள் முன்னோக்கியது. 'நீங்க கோபு இல்ல' என்று அவரைக் கேட்டதும், அவர் 'ஆமா நீங்க ராதா தானே' என்று சந்தேகத்துடன் கேட்டார். 'ஆமாம் ராதாதான்' என்ற அவள் 'நீ எப்படி டாக்டரானே! வகுப்பில பின் வாங்கில இருந்து விசிலடிச்சிக் கொண்டிருந்த நீ' என்று ராதா வியப்புடன் கேட்க, 'எனக்கு டாக்டராக வேண்டுமென்று சிறு பிள்ளையிலே அவா இருந்தது. வெளிநாட்டுக்கு போனேன். படித்தேன். டாக்டராகினேன். என்று பெருமையுடன் கூறினார் டாக்டர் கோபு.

'ஆமா! நீங்க இங்க?' என்று ராதா கேட்க 'மிஸ்டர் கதிரமலைக்கு சுகமில்ல என்று கூட்டி வந்தவங்க' என்று அவர் கூறும் போதே 'அவருக்கு இப்போ எப்படி?' என்று ராதா அவசரப்பட்டாள். 'பிரயோசனமில்லை' என்று டாக்டர் கையை விரித்தார். 'ஐயா' என்று கதறிக் கொண்டு உள்ளே நுழைந்தாள். உயிரற்ற அவர் உடல் கட்டிலிலே கிடந்தது. நாலைந்து பேர் ஆகவேண்டிய கடமைகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர். சரீர உதவி வழங்க ஒருசிலர் முன்வந்தனராயினும், பணவுதவி வழங்க எவருமே யில்லை. அங்கு ஏதாவது கிடைக்குமா என்பதற்காகவே சிலர் முன்வந்து கடமைகளில் ஈடுபட்டுள்ளனர். சிறிது நேரம் தன் கண்ணீர் அஞ்சலியை செலுத்திய ராதா டாக்டரிடம் வந்து 'டாக்டர் மேற்கொண்டு ஆகவேண்டியதைக் கவனியுங்க' எவ்வளவு செலவானாலும் பரவாயில்ல, நான் தாறன் என்று கூறி தன்னிடமிருந்த பிரயாணக் காசோலைகளில் கையெழுத்திட்டு அவரிடம் கொடுத்தாள். அநாதையாய்க் கிடந்து அழுக வேண்டிய பிணம் ஒன்று சகல கிரியைகளோடும், சைவ சமய முறைப்படி தகனம் செய்யப்பட்டது.

ராதாவைச் சந்திக்க டாக்டர் கோபு சட்டத்தரணி ஒருவருடன சென்றார், ராதா இதில் கையெழுத்துப் போடு' என்று டாக்டர் கூறியதும் 'எதுக்கு?' என்று ஆச்சரியத்துடன் கேட்டாள் ராதா. 'கதிரமலை இருந்த வீட்டை உனக்கே எழுதி வைத்து விட்டார். நேற்று இவரைக் கூப்பிட்டு எழுதச் சொல்லி கையெழுத்திட்டு உன்னிடம் கொடுக்கச் சொன்னவர்' என்றார் டாக்டர். ராதா உங்களை நான் பிறகு சந்திக்கிறேன். என்று கூறிவிட்டு சட்டத்தரணியுடன், புறப்பட்டார் டாக்டர் கோபு.

(தொடரும்)

(14ம் பக்கத்தின் தொடர்)

தற்போதைய இலத்திரனியல் சோதனைகளின் பெறுபேறாக - 90மைல்/மணியில் வீசப்படும்பந்தின் வேகத்தை ஒருதுடுப்பாட்டக்காரர் அவதானிப்பதற்கு 0 3 செக்கன்கள் எடுப்பதாகவும், மேலும் 0 3 செக்கன்கள் அதற்கு எதிராக ஆட எடுப்பதாகவும் அறியப்பட்டுள்ளது. இப்பந்துவீச்சை தலைக்கவசமிடாத ஒரே ஒரு துடுப்பாட்டக்காரர் வெற்றிகரமாக அவதானிப்பதை சரித்திரம் கூறுகின்றது. அவர் தான் கடந்த காலங்களில் இந்தியா அணிக்கு தலைமை தாங்கிய Little Master எனும் புனைப்பெயரைக் கொண்ட Sunny- Sunil Gavaskar ஆவார்.

வேகபந்து வீச்சில் சில நுட்பங்கள்

1. சுவிங் போலிங் (Swig Bowling)
   i) Out Swinger பந்து
   ii) In Swinger பந்து
2. பம்பர் பந்து (Bouncer/Bumber)
3. யோக்கர் பந்து (Yorker)
4. வேகம் குறைந்த பந்து (Slower boll)
5. கட்டர்ஸ் (Off cutters/Leg cutters)

சிங்கள அகராதியில் கூட இவ்வகைப் பந்துகளை விவரிக்க தற்போது முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. உதாரணமாக No Bol[ பந்திற்கு 'நிப்பந்துவ' எனும் சொல் தற்போது சேர்க்கப்பட்டுள்ளது; எனினும் தமிழில் சரியான கலைச்சொல் வெளியிடப்படாத காரணத்தால் நேரடி மொழிபெயர்ப்பே இங்கு கொடுக்கப்பட்டுள்ளது;

# இலங்கையில் வங்கியியல் வளர்ச்சியும் புதிய போக்குகளும்

திரு. கே. தம்பையா B.A.(Hons)(Jaff)Dip;in.Edu(ope.un)
விரிவுரையாளர், கிழக்குப் பல்கலைக்கழகம்.

## இலங்கைவங்கி

1938ம் ஆண்டு 53ம் இலக்க கட்டளை சட்டத்தின் பிரகாரம், 7.5 மில்லியன் ரூபா ஆரம்ப முதலுடன், கொழும்பில் பிரிஸ்ட்டல் வீதியில் முதல் வங்கி நிறுவப்பட்டது. 1946ல் இலங்கை வங்கியின் வெளிநாட்டு வங்கித் திணைக்களம் இயங்க ஆரம்பித்தது. இலங்கை வங்கியின் முதலாவது வெளிநாட்டுக் கிளை 1949ல் லண்டனில் திறக்கப்பட்டது. இதன் பின் 1967 வரை, ஏறக்குறைய 42 கிளைகள் வரை திறக்கப்பட்டது. இவ்வங்கி 1961 யூலை மாதம் தேசிய மயமாக்கப்பட்ட பின் இலங்கை வங்கியின் வளர்ச்சி சிறப்பாகக் குறிப்பிடத் தக்கது. தேசிய மயத்தின் பின் 1960ல் 49000 வைப்புக்களிலிருந்து 1967ல் 1,74,00 வைப்புக்கள் ஆகவும் அதிகரித்தது, அத்துடன் 1963-1977ற்கு இடைப்பட்ட காலப்பகுதியில் விவசாயக்கடன் திட்டத்தில் பங்கு கொண்டது. இதன் பொருட்டு 497 விவசாய கமநலச் சேவைநிலையங்கள் திறக்கப்பட்டு, அதன்மூலம் விவசாயக் கடன் வசதிகள் செய்யப்பட்டது.மாகாண பிராந்திய மாவட்ட அலுவலகங்களைக் கொண்டு இயங்கும் இலங்கை வங்கியானது. இன்று 300க்கு மேற்பட்ட கிளைகளைக் கொண்டு காணப்படுகின்றது. இலங்கை வங்கியைப் பொறுத்வரை 1977ம் ஆண்டின் பின் அதிகரித்துவரும் வர்த்தக அபிவிருத்தி நடவடிக்கைகட்கு ஏற்ப தனது நிதி நடவடிக்கைகளை ஒழுங்மைத்துள்ளது. இலங்கையில் காணப்படும் வணிகவங்கிகளுள் ஒரு முதன்மை ஸ்தானத்தை இவ் வங்கி பெற்றிருப்பதுடன், முதன் முதல் ஆரம் பித்த தேசிய வங்கி என்ற அடிப் படையில் விவசாயம், கைத்தொழில் ஏற்றுமதி, உள்நாட்டு வெளிநாட்டு வர்த்தகம், உல்லாசப் பிரயாணக் கைத்தொழில் ஆகியவற்றின் வளர்ச்சிக்கு பெரும் பங்காற்றுகின்றது. அரசாங்கத்தினால் பிரகடனப் படுத்தப் பட்டுள்ள ஏற்றுமதி நோக்கிய அபிவிருத்தி, புதிய கைத்தொழில் மய அந்தஸ்திற்கு இலங்கையின் தரத்தை உயர்த்துதல் (Nics) ஆகிய செயற்பாடுகளில் இலங்கைவங்கி குறிப்பிடத் தக்கபங்காற்றுகின்றது. சான்றாக ஏற்றுமதித் துறையின் அபிவிருத்திக்கு உலகளாவிய ரீதியில் 1500 முகவர் வங்கிகள் மூலம் உதவியளித்து வருகின்றது.

## மக்கள் வங்கி

கிராமியப் பொருளாதாரத்திற்கு கை கொடுப்பதையும்,கிராமியவிவசாயிகளதுகடன் சுமையை ஒழிப்பதையும், கிராமிய மக்களுக்கு தேவையான கடன் வழங்குவதையும் நோக்கமாகக் கொண்டு தனியொரு வங்கியாக 30 ஆண்டுகட்கு முன் 1961ம் ஆண்டு யூலை மாதம் 1ம் திகதி மக்கள் வங்கியென்ற அமைப்பு உருவாக்கப்பட்டது. முதன் முதல் இவ்வங்கி 46 ஊழியருடன் ஆரம்பிக்கப்பட்டது. இன்று அது பெரும் விருட்சமாய் வளர்ந்து 10,000 ற்கு மேற்பட்ட ஊழியரையும் 332க்கு மேற்பட்ட கிளைகளையும், 5.3 மில்லியன் வங்கி வாடிக்கையகயாளர்களையும் கொண்டு காணப்படுகின்றது. இன்று பல்வேறுபட்ட சமூக, பொருளாதார, கலாச்சார அபிவிருத்தி சார்தொழிற்பாடுகளையும் புரிகின்ற ஒருபெரும் வர்த்தக வங்கியாக இது காணப்படுகின்றது. மக்கள் வங்கி கிராமிய விவசாயத்தை ஊக்குவிக்கவும், விவசாயக்கடன் திட்டத்தை விரிவுபடுத்தவும் 100 இற்கு மேற்பட்ட கூட்டுறவு கிராமிய வங்கிகளை ஆரம்பித்து, விவசாய விருத்திக்கு உதவியுள்ளது. அத்துடன் சுயவேலை வாய்ப்பு, வறுமையொழிப்பு, வர்த்தக வளர்ச்சி, சர்வதேச

வர்த்தகம் என்பனவற்றிலும் அதிகம் ஆர்வம் காட்டுகிறது. 1986ல் இருந்து கணணிமய முறையையும், புதிய எலக்ரோனிக் முறையையும் ஆரம்பித்த அவ்வங்கிக் கடன் அட்டை முறை (Credit Card) வர்த்தக அட்டை (Commercial Card) சர்வதேச அட்டை (International Card) போன்றவற்றையும் அறிமுகம் செய்துள்ளது. இவற்றிற்கு மேலாக "ஜனசக்தி" என்ற சமூக கலாச்சார, பொருளாதாரத் திட்டமான வறுமையொழிப்பு அபிவிருத்தித் திட்டத்திற்கு பல்வேறுபட்ட நிதியுதவிகளை மக்கள்வங்கி வழங்கி வருகின்றது. இதனால் இன்று மக்கள்வங்கி வறியோருக்கான வங்கித்தொழில் சேவையிலும் பெரும் பங்காற்றுகின்றது.

## இலங்கை வரையறுக்கப்பட்ட வர்த்தக வங்கியும், கற்றன் தேசிய வங்கியும்

இலங்கையில் வங்கியியல் வளர்ச்சிக்கு குறிப்பிடத்தக்க பங்களிப்பை செய்கின்றது. 23 வருடங்கட்கு முன் தனியார் வர்த்தக வங்கியாக ஆரம்பிக்கப்பட்ட, வரையறுக்கப்பட்ட வர்த்தக வங்கி, இன்று தேசியமயமாக்கப்பட்ட வங்கியாகக் காணப்படுகின்றது. வர்த்தக அபிவிருத்தி, காப்புறுதிச் சேவைகள், முதலீட்டு நடவடிக்கைகள் போன்ற பல துணைச்சேவைகளையும் இவ்வங்கி செய்து வருகின்றது. இதே போல் 1970ல் ஆரம்பிக்கப்பட்ட கற்றன் தேசிய வங்கி முதன்முதல் கிராமத்தை நோக்கிச் சென்ற தனியார் வங்கியாகும்.

இன்று 46 ற்கு மேற்பட்ட கிளைகளைக் கொண்டு காணப்படுகின்றது. கிராமிய விவசாயம், சிறுவர்த்தகம், சிறுகைத்தொழில், சுயவேலை வாய்ப்பு போன்ற பல்வேறு தொழிற்பாடுகளை புரிகின்றது.

வணிக வங்கிகட்கு புறம்பாக 1971ம் ஆண்டு முதல் தொழிற்பட்டுவரும் தேசிய சேமிப்பு வங்கியானது இலங்கையின் சேமிப்புத்துறையில் ஒரு புதிய வளர்ச்சியை தோற்றுவித்தது. கிராமியத்துறையில் அல்லது அடிமட்டத்தில் இருந்து சேமிப்பை ஊக்குவிக்கும் பொருட்டு தேசிய சேமிப்பு வங்கியும், தபாற்கந்தோர் சேமிப்பு முறையும் பணியாற்றிவருகின்றன. சேமிப்புக்கணக்குகள், நிலையான வைப்புக்கணக்குகள் வளர்ந்தோர் வைப்புத் திட்டம், சிறுவர் சேமிப்புத்திட்டம். போன்ற பல்வேறு வைப்புக்கள் மூலம் நாட்டின் தேசிய சேமிப்பை அதிகரிக்க முயற்சிக்கும் இவ்வங்கி இன்று 25ற்கு மேற்பட்ட கிளைகளைக் கொண்டு காணப்படுகின்றது.

1977 களின் பின் வங்கித்துறை சார்ந்த புதிய போக்குகள் தொடர்பாக அபிவிருத்தியை ஊக்குவிக்கும் வங்கிமுறையானது சிறப்பான தொன்றாகும். இத்தகைய ஒரு முன்னெடுப்பு 1964ல் ஆரம்பித்த போதிலும் 77களின் பின் பல புதிய பிராந்திய, கிராமிய, தேசிய மட்டத்திலான அபிவிருத்தி சார்பான வங்கி அமைப்புக்கள் தோற்றம் பெற்றன. அவற்றுள் பின்வருவன குறிப்பிடத்தக்கவை.

1) கிராமிய அபிருத்திவங்கி
2) தேசிய அபிவிருத்தி வங்கி
3) அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபனம்
4) பிராந்திய கிராமிய அபிவிருத்தி வங்கி
5) அரச ஆதன முதலீட்டுவங்கி

இவ்வங்கி முறைகள் அபிவிருத்திக்குப் பல்வேறுபட்ட பணிகளை ஆற்றுகின்றன. அவற்றை சற்று நோக்குவோம்.

கிராமியப் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்தல் கிராமிய மக்களின் காலடிக்கே வங்கித்தொழிலை எடுத்துச் செல்லல், கிராமிய மக்களின் கடன் சுமைக்கு எதிராகப் போராடல், கிராமிய விவசாயப் பிரச்சினைகளை தீர்த்து வைத்தல் ஆகிய மக்கள் வங்கியின் பிரதான குறிக்கோள்களை நிறைவேற்றும் பொருட்டு 1964ம் ஆண்டு கிராமியவங்கி முறை ஒன்று ஆரம்பிக்கப்பட்டது. இதன் அடிப்படையில் கண்டி மாவட்டத்தில் 'மெனிக்கின்ன' என்ற இடத்தில் முதல் கிராமிய வங்கி ஆரம்பிக்கப்பட்டது. இக்கிராமிய வங்கி அமைப்பானது கூட்டுறவு அமைப்புடன் இணைந்து கடந்த 28 ஆண்டுகளாக 1000ற்கு மேற்பட்ட கிளைகளைக்கொண்ட ஒரு வலைப்பின்னல் அமைப்பாகக் காணப்படுகின்றது. கிராமிய வங்கிமுறை பல சவால்களுக்கு மத்தியில் உறுதியான முறையிலும் தீவிரமான முறையிலும் வளர்ச்சி கண்டுள்ளது இதனால் வங்கித்தொடர்பு, வங்கித்தொழில் ஆகியவற்றிலும் வளர்ச்சி ஏற்பட்டுள்ளது. சான்றாக 1991 முடியும்வரை இலங்கையின் 15இற்கு மேற்பட்ட பிராந்தியங்களில் 1051 கிளைகளுடன் 300 கோடி ரூபா பெறுமதியான சேமிப்புக்களையும் 30 கோடி ரூபா பெறுமதியான நிலையான வைப்புக்களையும் 125 கோடி ரூபா பெறுமதியான குறுங்காலக்கடன்களையும் வழங்கியுளது. கிராமிய வங்கிகளின் கடன்களில் 50% ற்கு மேற்பட்டது. வீடுகள் நிர்மாணித்தல், மின்சக்தி விநியோகம், குடிசைக்கைத்தொழில், விவசாய உற்பத்தி, சிறுவர்த்தகம், சுயதொழில் வாய்ப்பு போன்ற சமூகநல அடிப்படை அபிவிருத்தித்திட்டங்களுக்கு வழங்கப்படுகின்றது.

(தொடரும்)

# இதயத்தில் நீ.......

அன்பே காற்றையும்
கடவுளையும் காணாமல்
வாழ்ந்த எனக்கு
உன்னைக்காணாமல்
வாழமுடியவில்லை.

★

உன் இதயஒலியின்
எதிரொலிதான்
என் இதய அசைவு என்பதை
நீ
புரிந்து கொள்வாயா.

★

சுவாசிக்க மறந்த என்னால்
உன்னை மறக்கமுடியவில்லை
அன்பே மறக்க முடியவில்லை.

★

உன்னை நினைத்து நினைத்து
என்னையே நான்
மறந்துவிட்டேன்.

★

உன்னை மறப்பதென்றால்
என்
மனத்தையே
நான் மறக்க வேண்டும்.
எனக்கு இதயம் உள்ளவரை
அதில் நீ இருப்பாய்.

A. K. தயானந்தன்
கலைப்பீடம், 3ம் வருடம்

# சிணுங்கல்

வரட்சிப் பருவச்
சேற்று வெடிப்பாய்
உன் பிரிவுப்
பயணப் போக்கின் உக்கிரம்
என் இதய வறைகளின்
எண்ணிக்கையை
ஏராளப் படுத்த
ஆதார சுத்திகளே
அடிப்படையை இழக்க
என்னை எதுவென
ஆதாரப் படுத்த இயலாமல் இருந்தேன்;
இப்படியொரு இயைபாக்கமா?
உன் பிரிவின் சக்தி
பூகம்பத்தை விடவும்
கொடூரமானதா?
வருவாய் என்ற எதிர்பார்புத்தானே
இன்னும் என்
இதய வழி நாளங்களை
வரட்சியடையாது
வைத்திருக்கின்றன;
ஒவ்வொரு சோக வெடிப்புக்குள்ளும்
ஏதோ ஒரு வகைதொடர்புகள்
நாளங்களால்
நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கிறது.
வரவு என்ற மகிழ்ச்சி மழை
வரும் வரை
இந்த இதயச் சோணை
வெடிப்புப் பிரிப்புக்கள்
மேலும்
வீங்கிக் கொண்டே இருக்கும்;

க. அன்பழகன்
கலைப்பீடம், 3ம் வருடம்
கிழக்குப்பல்கலைக்கழகம்
மட்டக்களப்பு.

# வாசகர் பகுதி

கிழக்குப்பல்கலைக்கழகத்தின் 'கிழக்கொளி' சஞ்சிகையினைக் கண்டேன். உள்ளடக்கம், தரம், அமைப்பு யாவும் பிரமாதமாகவும், அழகாகவும், அமைந்திருந்தது. இலக்கியமும், கலையும் நிறைய நிறையப்பொதிக்துள்ளது. 'மெழுதுவர்த்தி எரிகின்றது' தொடர்கதை வெற்றிப் பாதையில் வீறுநடை போடுகின்றது. கிழக்கிலங்கையின் பெயரினைக் காப்பாற்ற பல சஞ்சிகைகளும் நாவல்களும் கிழக்கில் வெளியாகும் இந்த காலகட்டத்திலே 'கிழக்கொளி'யும் ஒரு புத்தொளியைத் தருகின்றது. இலக்கியத்தாகமுள்ள எனக்கு 'கிழக்கொளி' தொடர்ந்து கிடைப்பது பெரும் சிரமமாக உள்ளது. எனக்காகவேண்டி 'கிழக்கொளி' சஞ்சிகை தொடர்ந்து கிடைக்கப் பிரதம ஆசிரியர் ஆவன செய்வாரென்று கேட்டு 'கிழக்கொளி'யின் உயரிய பணி தொடரட்டும் என்று வாழ்த்துகின்றேன்.

இப்படிக்கு
கலையுள்ளம் மரூத்அஹமத்
90, மத்திய வீதி, காத்தான்குடி.

நன்றி வாசகரே! உம்மைப்போன்றே பலரும் கடிதங்கள் எழுதிக்கொண்டிருக்கிறார்கள். உமக்குத் தேவையான 'கிழக்கொளி' சஞ்சிகை கிழக்குப்பல்கலைக்கழகத்தில் கடமை புரியும் ஊழியர்கள் மூலமாகவோ, பயிலும் மாணவர்கள் மூலமாகவோ நீர் பெற்றுக்கொள்ளலாமென்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றேன்.

— ஆசிரியர் —

ஆறுமுகம் வரதராஜன்
களுவன்கேணி-01
முறக்கொட்டாஞ்சேனை.

கிழக்கொளியின் தை-சித்திரை 94 சஞ்சிகையைப் பார்த்தேன். அனைத்து அம்சங்களும் சிறப்பாக இருந்தன. அதிலும் எஸ். மோசேஸ், கல்லடி என்பவரின் கவிதை தற்கொலை செய்யத்துணியும் மனிதர்களுக்கு ஒரு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துவதாக உள்ளது. இது போன்ற கவிதைகளை எதிர்பார்ப்பதோடு அவரின் விலாசத்தையும் பிரசுரிப்பீர்களா? தயவு செய்து 'கிழக்கொளி' வாயிலாக அவரின் விலாசத்தைத் தருமாறு கேட்டுக்கொள்கின்றேன்,

முகவரி:
எஸ். மோசேஸ்
டச்பார் றோட்,
கல்லடி, மட்டக்களப்பு.

இப்படிக்கு,
அன்பின் வாசகன்,
A. வரதராஜன்

---

## புதியதொரு வீடு பாநாடகம் பற்றி சில குறிப்புகள்

★ இது ஒரு மோடிமைப்படுத்தப்பட்ட (Stylised) நாடகமாகும். இயற்பண்புப் பாணியும், (Naturalism) இயற்பண்பு எதிர்ப் பாணியும், (Anti Naturslism) இதில் சங்கமிக்கின்றன.

★ ஆடல்கள், அசைவுகள், குறியீடுகள் என்பன அர்த்த பாவத்துடன் கையாளப் பட்டுள்ளன.

★ வசனங்களையும், பாத்திரங்களின் அசைவுகளையும் உன்னிப்பாக அவதானிப்பதன் மூலம், ரசானுபவத்தைப் பூரணமாகப் பெறலாம்.

★ கிழக்குப் பல்கலைக்கழக நுண்கலைத்துறையின் முதற் தயாரிப்பு இது. உங்கள் ஆதரவும் ஊக்கமும் மேலும் எம்மைச் செயற்பட வைக்கும்.

# விவாகப் பொருத்தம்

சோதிடமணி பழ - பொன்னையா
குறுமண்வெளி.

உலகில் பல சாதி மக்கள் இருக்கிறார்கள். அவர்கள் சாதகம் பார்த்துத்தான் விவாகம் செய்வதில்லை. சாதகம் பார்க்காமலேயே எத்தனையெத்தனையோ விவாகங்கள் நடந்திருக்கின்றன. நடக்கின்றன. அந்தவிவாகங்கள் மூலம் எதுவிதக் குறைவுகளும் உண்டாகாமல், நன்மைகளே நடந்திருப்பதையும், சாதகம் பார்த்து விவாகம் செய்தவர்களில், சொல்லொண்ணாத் துயரங்களைப் பலர் அடைந்திருப்பதையும், காணக் கூடியதாக இருப்பதால், சாதகம் பார்த்து விவாகம் செய்யும் வழக்கமே, எங்கள் குடும்பத்தில் இல்லை என்று சொல்லும் பலர் உண்டு.

பொருத்தம் பார்த்துச் செய்த விவாகங்கள் சீரழிந்து சின்னாபின்னமாகி விட்டதென்றால், அதற்காகச் சோதிடம் பொய்யானதும், சோதிடத்தை நம்பக்கூடாதென்றும் சொல்ல முடியுமா?

சோதிட சாத்திரத்தை நன்றாகத் தெரிந்து கொள்ளாமல், "படித்தவன் பாட்டைக் கெடுத்தான், எழுதியவன் ஏட்டைக் கெடுத்தான்" என்பதற்கு ஒப்ப அரைகுறையாகக் கற்றறிந்த சிலர் சொல்வதில் தவறு இருப்பதே காரணமாகும். அதற்காகச் சோதிட சாத்திரத்தை ஏற்படுத்தி நமக்குத் தந்த மகான்களான மகரிஷிகளை ஏமாற்றுக்காரர்கள் என்று அவமானப்படுத்தலாமா?

சூரியன், பிரமதேவன், வியாசர், வசிட்டர், அத்திரி, பராசர், காசிபர், நாரதர், கார்க்கியர், மரீசி, மனு, அங்கிரஸ், ரோமசர், பௌருகுத்தர், சயவனர், யவனர், பிருகு, சௌனகர் என்ற 18 மகரிஷிகளே சோதிடசாத்திரத்தை உலகில் பரவச் செய்தவர்கள். முக்காலங்களை உணர்ந்த உத்தமர்கள், உலக மக்கள் உய்யும் பொருட்டு, உவந்தளித்த உத்தம பொக்கிஷம் சோதிடசாத்திரம்.

சோதிட சாத்திரம் பிரத்தியட்சமான பலன்களையுடையது. வசந்தம் முதலிய ருதுக்களையும், பூரணை, அமாவாசை முதலான திதிகளையும், நட்சேத்திர விசேஷங்களையும், சூரிய சந்திர கிரகணங்களையும் நாம் அறிந்து கொள்வதற்கு உறுதுணையாக உள்ளது.

சோதிடசாத்திரம் அனுபவத்திற்கொத்ததாய், விவாகத்துக்குமுன் ஆண்கள், பெண்கள் இவர்களின் சாமுத்திரிகா இலட்சணங்களை அறிந்தே விவாகம் செய்யவேண்டுமென்று கூறுகிறது.

விவாகத்துக்கு முன் பொருத்தம் பார்த்துச் செய்தவர்களுக்கும், சாதகம் பார்க்காமல் செய்தவர்களுக்குமிடையில் சில விஷயங்களில், பலன்கள் முரண்பாடாக இருந்தாலும், சோதிடசாத்திர வல்லுனர்கள் மூலம், பொருத்தம் பார்த்துச் செய்தவர்கள், முடிவில் நன்மையே பெறுவார்கள். பெற்றும் இருக்கிறார்கள்.

சோதிட சாத்திரம் சிட்சை, வியாகரணம், சந்தம், நிருக்தம், சோதிடம், கல்பம் என்னும் ஆறு வேதாங்கங்களுள், ஒன்றாக இருப்பதால் தான் சந்திர சூரிய கிரகணங்கள் சங்கிராந்தி, ஏகாதசி, பூரணை, அமாவாசை முதலிய முக்கியமான கால விசேஷங்களையும், நட்சேத்திர விசேஷங்களையும், முகூர்த்த விசேஷங்களையும் தெளிவாக அறிந்துகொள்ள முடிகிறது. இதனாலேயே சோதிடம் வேதாங்கமாக இருக்கிறது.

சோதிட சாத்திரம் வேதபுருஷனின் கண்களாகச் சொல்லப்பட்டிருப்பதால், ஏனைய அங்கங்கள் இருந்தும், கண்கள் இல்லாவிட்டால், மனிதன் எக்காரியங்களுக்கும் தகுதியற்றவனாவதால், கண்ணான சோதிட சாத்திரமானது, மற்றைய எல்லாவற்றுள்ளும், சிறந்தது என்று சொல்லப்படுகிறது. எனவே பொருத்தம் பார்த்துத்தான் விவாகம் செய்ய வேண்டுமென்பதை எவரும் மறுப்பதற்கில்லை.

பெண் இல்லத்தரசியாகவிருந்து, கொண்ட கணவனின் வாழ்க்கைத் துணைவியாக நற்பணி புரிந்து - குலத்தை வளர்ப்பவளாதலால், பெண்ணுக்கும் பொருத்தமான கணவனைத் தேர்ந்து எடுப்பதே பொருத்தம் பார்ப்பதன் நோக்கமாகும்.

1. கிரகப் பொருத்தம்
2. நட்சேத்திரப் பொருத்தம்

என 27 வகைப் பொருத்தங்கள் பற்றிச் சோதிட நூல்களில் கூறப்பட்டுள்ளன.

நட்சேத்திரங்களைக் கொண்டு தீர்மானிக்கும் பொருத்தங்களிலும், ஆண், பெண் இருவரதும் கிரக நிலைகளைக் கொண்டறியும், பொருத்தமே முக்கியமாகும். அதனால் இருவரதும் கிரகநிலைகளை நன்றாக ஆராய்ந்தே விவாகப் பொருத்தம் தீர்க்க வேண்டும். நட்சேத்திரங்களைக் கொண்டு பார்க்கும் பொருத்தம் நல்லவிதம் அமைந்து இருந்தாலும், கிரக நிலை பொருத்தங்கள் இல்லாவிட்டால், குடும்ப வாழ்க்கையில் நல்ல ஒற்றுமையுள்ளதும், முன்னேற்றமானதுமான பலன்களை எதிர்பார்க்கமுடியாது போய்விடுவதுடன், வாழ் நாட்களும் கீழ் நாட்சுளாய்க்குட்டிச் சுவராக மாறிவிடும், என்பதைச் சோதிட நூல்கள் மூலம் தெளிவாக அறியக்கூடியதாக உள்ளது.

கிரக நிலைப் பொருத்தம்

பாவக்கிரகங்களான சூரியன், செவ்வாய், சனி, இராகு, கேதுக்கள் பற்றி மிகவும் நுணுக்கமாக ஆராய வேண்டும். இந்தக்கிரகங்கள், ஆண், பெண் இருவர் கிரகநிலைகளிலும் 1. 2. 4. 7. 12ம் இடங்களில், பகைநீசம் அஸ்தமன தோஷங்களோடு இருப்பின் இரு எதிர்மறை = உடன்பாடு என்றவகையில் பொருத்தம் உள்ளதாகக் கொள்ளலாம், ஒன்றுக்கொன்று முரணாக இருக்குமானால், அதாவது ஒருவருக்குக் குற்ற முள்ளவைகளாகவும், மற்றவருக்குக் குற்றமற்றவைகளாகவும் இருந்தால் விவாகப் பொருத்தம், ஆயுட் பலமற்றதும், குடும்பப்பிணக்கு, நோய் நொடி, கஷ்டம் நஷ்டம், வறுமை உள்ளதாக அமைவுமாதலால் விவாகத்துக்கு ஏற்றதாக அமையாது.

சூரியன், செவ்வாய், சனி, இராகு, கேது இவைகளில் செவ்வாயை முக்கியமாக ஆராய வேண்டும். செவ்வாய் பதிகாரகன், மங்கள காரகன், சகோதர காரகன் என ஆதிக்கம் பெற்றது ஆனதால், தம்பதிகளின் இல்லற வாழ்க்கையில் பலவிதமான மாற்றங்களைச் செய்யும் ஆற்றல் உடையது.

இலக்கினம், சந்திர இலக்கினம், சுக்கிரனுக்கு, 2.4.7.8.12ம் இடங்களில் செவ்வாய் இருப்பது தோஷமாகும்.

இலக்கினத்துக்கு, 2, 4, 7, 8, 12ம் இடங்களில் செவ்வாய் இருந்தால் முழுத்தோஷம் என்றும், அவ்விதம் சந்திரனுக்கு இருந்தால் முக்கால் தோஷம் (75%) என்றும், சுக்கிரனுக்கு இருந்தால் அதை (50%) தோஷம் என்றும் சொல்லப்படுகின்றன.

பெண்ணுக்குச் செவ்வாய் தோஷம் இருக்கக் கணவனுக்குச் செவ்வாய் தோஷம் இல்லாவிட்டால், மனைவியையும் பாதிக்கும் என்று சொல்லப்படுவதால், விவாகப் பொருத்தம் பார்க்கும் சோதிடர்கள், இலக்கினத்துக்கு மாத்திரம் பார்க்காது இலக்கினம், சந்திரன், சுக்கிரன் ஆகியமூன்றிற்கும் செவ்வாய்தோஷம் இருக்கிறதா? இல்லையா? என்பதைப்பார்க்க வேண்டும். ஒருவருக்கு கிரக நிலைப்படி செவ்வாய்தோஷமும், மற்றவருக்கு கிரக நிலைப்படி தோஷம் இல்லா விட்டால், அவற்றைப் பொருத்தம் இல்லை என்று தீர்மானிக்கக்கூடாது. கிரக நிலைப்படி தோஷம் இல்லாவிட்டாலும், அவரது நவாமிஸ இலக்கினத்தில் செவ்வாய் தோஷமுடையதாக இருப்பின், அது பொருத்தம் உள்ளதாகும்.

(தொடரும்)

# உணவாக காளான்கள்........

ஜூடி அரசநிலை-தாவரவியற் பகுதி

உலகின் சனத்தொகை தினமும், 2 இலட்சம் மக்களால் அதிகரித்துக்கொண்டு வருகிறது. இந்த அதிகரித்த சனத்தொகைப்பெருக்கத்திற்கு, உணவு உற்பத்தி ஈடுகொடுக்க முடியாமையினால், போசனைக்குறைபாடு (Malnutrition or Proteinhunger) இலங்கை போன்ற ஓர் அபிவிருத்தியடைந்துவரும் நாட்டிற்கு, பெரும் பிரச்சினையாகவுள்ளது. எமது சமுதாயத்தின் பெரும் பகுதியை உருவாக்கும் வருமானம் குறைந்த வகுப்பினருக்கு, விலங்குப் புரதம் என்பது எப்பொழுதும் எட்டாத தொன்றாகவே இருந்து வருகின்றது. காளான்கள், மதுவம், அல்காக்கள் போன்ற தாவரப் புரதங்கள் விலங்குப் புரதத்திற்குப் பதிலாக, சிபார்சு செய்யப்படுகின்றன. இவற்றுள் காளான்கள் மிகவும் பிரபல்யம் அடைந்து வருகின்றன.

பொதுவாகக் காளான்கள் எனப்படுபவை பங்கசுக்களின் ஒரு வகுப்பாகும். இவை மிக உயர்ந்த போசனைப் பெறுமானமுள்ளவை. உணவாகப் பயன்படுத்தப்படும் காளான்கள் தமது உலர் நிலையில் 21 - 30% புரதத்தைக் கொண்டவை. இப்பெறுமானம் தானியங்கள், பருப்பு வகைத் தானியங்கள், பழங்கள் முதலியவற்றுடன் ஒப்பிடும் போது, மிகவும் உயர்ந்ததும், மரக்கறிகளில் அடங்கியுள்ள புரதத்தின் (உருளைக்கிழங்கு 7.6% கோவா 18.4%) இருமடங்குமாகும். காளான்களின் புரதப் பெறுமானம் விலங்குப் புரதத்தையும், (83%) முட்டையிலுள்ள புரதத்தின் அளவையும் (50.6%) விடக் குறைவாக இருப்பினும், மனிதனின் போசனைக்குத் தேவையான எல்லா அமினோ அமிலங்களையும் தேவையான அளவில் கொண்டுள்ளன.

காளான்களிலுள்ள தாதுப் பொருட்களின் பெறுமானம் எல்லா மரக்கறிகளிலுள்ள தாதுப் பொருட்களின் இரு மடங்காகவும், இறைச்சி, மீன் போன்றவற்றிலுள்ள தாதுப் பொருட்களை விட அதிகமாகவும் உள்ளது. காளான்கள் கூடியளவு லைசீனைக் (Lysine) கொண்டிருப்பதால், தானியங்களை உண் போரின் லைசீன் குறைபாட்டையும் இவ்வுணவு நிவர்த்தி செய்யும். இவற்றைவிட காளான்களின் காபோவைதரேற்றுக்களும், மாப்பொருளும் குறைவாகக் காணப்படுவதால் நீரழிவு, இருதய நோய்களால் பாதிக்கப்பட்டோருக்கும், நிறையைக் குறைக்க விரும்புவோருக்கும் இது ஒரு சிறந்த உணவாகும்.

போசனை உணவாக விளங்குவதுடன், காளான்களின் வளர்ப்பிற்கு விவசாயக் கழிவுப் பொருட்கள் பயன்படுத்தப்படுவதனால், விவசாயக் கழிவுப் பொருட்களை மீளப் பாவித்தலுக்கும் உதவுகின்றன. இப்பொழுது காளான்கள் வியாபார ரீதியாக உலகெங்கும் பயிர் செய்யப்படுகின்றனவாயினும், இவற்றை உணவாக பயன்படுத்தும் வழக்கம் மனித நாகரீகம் தொடங்கிய காலம் முதல் இருந்து வருகின்றது. பண்டைய எகிப்தியர்கள் காளான்களை ஆட்சியாளர்களின் உணவாகக் கருதினர். (Food for Pharaohs - Title of ruler of ancient Egypt) பண்டைய கிரேக்கர்களும்; உரோமர்களும் காளான்களை கடவுளின் உணவு (Food for the Gods) என தமது சரித்திரங்களில் குறிப்பிட்டுள்ளனர். வேடர்களும் காளான்களை உணவாகப்பயன்படுத்தியமைக்கு சான்றுகளுள்ளன. இலங்கை போன்ற ஓர் அபிவிருத்தியடைந்து வரும் நாட்டில் மிக எளிதாக நாம் இவற்றை வளர்த்து, எமது போசனைக் குறைபாட்டை நீக்குவதோடு உல்லாசப் பயணிகளைக் கவரும் ஓர் உணவாகவும் பாவித்து பொருளாதாரத்தை மேம்படுத்தலாம்.

காளான்களில் நாம் உணவாகப் பயன் படுத்தும் பகுதி பங்கசுக்களின் இனப்பெருக்க அங்கங்களாகும். முதலில் நுண்ணிய பந்து போன்ற அமைப்பாக நிலத்திலிருந்து வெளிவரும் இவை ஒரு குறுகிய தண்டையும்,ஒரு மூடி போன்ற அமைப்பையும் கொண்டிருக்கும். முதிர்ச்சியடைந்ததும் குடைபோன்று காணப்படும்: நிலத்தின் கீழ்க்காணப்படும் வேர் போன்ற பகுதி பூஞ்சண வலை எனப்படும்: இவை இறந்த சேதனப் பொருட்களில் தகுந்த சூழல் காரணிகளின் மத்தியில் வளரும்.

**Agaricus, Volvariella, Pleurotus** என்பன வர்த்தக நோக்கத்துடன் செய்கை பண்ணப்படும் மிக முக்கிய காளான் இனங்களாகும். இவற்றுள் பொதுவாக Paddy Straw or Bananna Mushroom என அழைக்கப்படும். **Volvariella** sp. இலங்கை போன்ற உஷ்ண வலய பிரதேசங்களில் செய்கை பண்ணுவதற்கு உகந்த இனமாகும்.

இலங்கையில் மிகவும் பிரசித்தமான **Vol variella** Species, **Volvariella esculenta** ஆகும். இது இலங்கையின் ஒரு சில குளிர்ப் பிரதேசங்கள் தவிர்ந்த ஏனைய எல்லாப் பாகங்களிலும், இயற்கையாக வளரும். இக்காளான் மிகவும் குறுகிய வாழ்க்கை வட்டம் (12–15 நாட்கள்) கொண்டது. ஆனால் ஒரு வருடத்தில் ஒரு முறை அல்லது, இருமுறை மாத்திரமே இயற்கைச் சூழலில் வாழ்க்கை வட்டத்தை பூர்த்தி செய்யும். எனவே செயற்கையான வைக்கோலில் செய்கை பண்ணப்படலாம்.

இக்காளான் செய்கையின் பின்பக்க விளைவாகப் பெறப்படும் வைக்கோல், அதிகளவு நைதரசனைக் கொண்டிருப்பதால், சேதனப் பசளையாகப் பயன்படும். Vesculenta நிழலுள்ள இடத்தில் அதிகமாக வைக்கோலால் வேயப்பட்ட இடத்தில், மரத்தால் செய்யப்பட்ட ஒரு மேடையின் மேல் செய்கை பண்ணப்படும்.

இடத்தைத் தெரிவு செய்தபின் முதலாவது படி வளர்ப்பிற்குத் தேவையான ஊடகத்தைத் தயாரிப்பது; இரண்டாவது படி Spawning விதைத்தல் வித்தியாசமான வளர் பூடகங்களில் காளான்களின் Spawns என அழைக்கப்படும் தாவரவித்துக்களுக்கு ஒப்பிடக் கூடியவை சந்தைகளில் விற்பனை செய்யப்படும் இவை, **Spawning** ற்கு பயன்படும். வைக்கோல் இங்கு வளர்ப்பு ஊடகமாகப் பயன்படும்.

முதலில் 500 g நிறையுள்ள 16 cm விட்டமும் 85cm நீளமும் உள்ள கட்டுக்களாகக் கட்டப்பட்டு நீரில் 12-24 மணித்தியாலங்களுக்கு ஊறவிடப்படும். இவ்வாறு பதப்படுத்தப்பட்ட கட்டுகளில் 8 நிரைக்கு 4 ஆகஇரண்டு நிரைகளில் மேடையில் அடுக்கப்படும். இதன்பின் காளான்களின் விதைகள் எனப்படும் Spawn சிறிய துண்டுகளாக நறுக்கப்பட்டு 4" இடைவெளிக்கொன்றாக வைக்கோலில் ஓரங்களில் இருந்து 4" உட்பக்கமாக வைக்கோலில் வைக்கப்படும். இதேபோன்று 4 அல்லது 5 தட்டுக்களில் வைக்கோலும் Spawns உம் மாறி மாறி அடுக்கப்படும். இதன்பின் வைக்கோல் நன்றாக அழுத்தப்பட்டு முழு அமைப்பும் 183 cm நீளமும் 90cm அகலமும் உள்ள ஒரு பொலித்தீனினால் மூடப்படும். இது பங்கசின் வளர்ச்சிக்குத் தேவையான ஈரலிப்புத் தன்மையை வழங்கும். 36" × 10" × 1" பரிமாணமுள்ள இரண்டு பலகைகளை பொலித்தீனின்மேல் குறுக்காக வைத்து 75 –100 இறா. நிறைகள் இதன்மேல் அடுக்கப்படும். இது பங்கசின் வளர்ச்சியைத் தூண்டும்.

காளான் மேடைகளிற்கு ஒரு நாளைக்கு ஒருதரம் வீதம் சிறிது நீர் தெளிக்கப்படும். ஈரலிப்புத்தன்மை மிகவும் குறையும் போதும், அதிகமாகக் காணப்படும் போதும் பங்கசின் வளர்ச் பாதிக்கப்படும். 11–15 நாட்களின் பின் காளான்கள் சிறிய Button போன்ற அமைப்புக்களாகக் கூட்டங் கூட்டமாக உருவாகத் தொடங்கும். காலநிலை சாதகமாகக் காணப்படின் அறுவடைக் காலம் 25 தொடக்கம் 30 நாட்கள் வரை நீடிக்கும். ஒரு மேடையிலிருந்து கிட்டத்தட்ட 3kg காளான்களை அறுவடைசெய்யலாம். அதிகளவில் செய்கை பண்ணப்பட்டு அறுவடை செய்யும் போது சந்தைப்படுத்துவதற்கு முன் தகரத்தில் அடைத்தல், உலர்த்துதல் அல்லது குளிரூட்டல் மூலம் அதிக நாட்களுக்கு சேகரித்து வைக்கலாம்.

(இன்னும் உண்டு)

# 'இலங்கையின் உள்ளூராட்சி முறையில் பிரதேச சபைகள்' - ஒரு நோக்கு

வேலுப்பிள்ளை குணரத்தினம்
விரிவுரையாளர், கிழக்குப் பல்கலைக்கழகம்

இலங்கையின் உள்ளூராட்சி முறை மாநகர சபைகளையும், நகர சபைகளையும், பட்டின சபைகளையும், கிராமசபைகளையும் உள் அடக்கியதான நீண்டகால வரலாறு கொண்டதாக அமையப்பெற்று விளங்கியது.

1980 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க அபிவிருத்திச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் பட்டின சபைகள், கிராம சபைகள் இல்லாதொழிக்கப்பட்டு மாவட்ட அபிவிருத்திச்சபைகள் இலங்கையின்ஒவ்வொரு நிருவாக மாவட்டத்திலும் தோற்றம் பெற்றன.

மாவட்ட அபிவிருத்திச்சபை செயற்பாடானது அதன் குறிக்கோளை அடைவதற்கு பதிலான எதிர்விளைவினையே நடைமுறையில் ஏற்படுத்தியது. நிருவாகப் பரவலாக்கத்திற்குப் பதிலான நிருவாக மையப்படுத்தலையும், வீண்கால தாமதத்தையும் அபிவிருத்தியில் மக்கள் பங்குபற்றுதல், பங்களிப்புச் செய்தல் என்பவற்றில் தடை நிருவாகத்துக்கும், மக்களுக்கும் நீண்ட இடைவெளித் தூரம் என்பவற்றை நடைமுறையில் ஏற்படுத்தூற்று.

உள்ளூர் மட்டத்தில் நிருவாக, மற்றும் அபிவிருத்திச் செயற்பாடுகள் தொடர்பான முடிவுகளை எடுக்கும் நடைமுறையில் பயனுறும் வகையில் மக்கள் பங்குபற்றுவதற்கு பெருமளவு வாய்ப்புக்களை ஏற்பாடு செய்யும் நோக்குடன் 1987ம் ஆண்டின் 15ம் இலக்க சட்டத்தின் பிரகாரம் பிரதேச சபைகள் உருவாக்கப்பட்டன. இலங்கையில் 99% வீதமான நிலப்பரப்பு பிரதேச சபை நிருவாகத்தின் கீழ் வருகின்றது. இந்நாட்டில் 12 மாநகர சபைகளும் 39 நகரசைபகளும் 257 பிரதேச சபைகளும் உள்ளன.

உள்ளூராட்சிக்கு பொறுப்பான அமைச்சர் கசற்றில் வெளியிடப்படும் கட்டளை மூலம் இச்சட்டத்தின் நோக்கங்களுகாக ஏதேனும் இடப்பரப்பினை பிரதேச சபை இடப்பரப்பு ஒன்றாக வெளிப்படுத்தலாம். இவ்வாறு வெளிப்படுத்தப்படும் பிரதேச சபையின் நிருவாக எல்லைகளானவை இயலுமான வரை பிரதேச செயலாளர் பிரிவுள் அடங்கும். மாநகர சபை, நகர சபை எல்லைகள் நீங்கலான பிரதேச செயலாளர் பிரிவாக இருத்தல் வேண்டும்.

ஒவ்வொரு பிரதேச சபை இடப்பரப்புக்கும் அமைக்கப்பட்ட பிரதேச சபையானது அத்தகைய இடப்பரப்புக்கு உள்ளூர் அதிகார சபையாகவும் இருத்தல் வேண்டும். பொது மக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள், பகிரங்க பொது வழிகள் என்பன தொடர்பான கருமங்களில் ஒழுங்குபடுத்துகை கட்டுப்பாடு மக்களின் சௌகர்யம், சேமநலனையும், வாழ்வசதிகளையும் பாதுகாத்தலும், மேம்படுத்தலும் பிரதேச சபைகளுக்குப் பொறுப்பளிக்கப்பட்டுள்ளன.

பிரதேச சபைகள் தவிசாளர் ஒருவரையும், துணைத்தவிசாளர் ஒருவரையும் எந்தப் பிரதேச சபைக்கு அமைக்கப்பட்டதோ அப்பிரதேசத்தின் இடப்பரப்பு, மக்கள் தொகை அத்துடன் பொருளாதார விருத்தி மட்டம் என்பவற்றைக் கருத்தில் கொண்டு அமைச்சரால் கசற்றில் வெளியிடப்படும் அங்கத்தவர் எண்ணிக்கையைக் கொண்டிருத்தல் வேண்டும்.

உறுப்பினர் ஒருவர் இறப்பதன் மூலம், பதவி துறப்பதன் மூலம் அல்லது பதவியில் இருந்து அகற்றப்படுவதன் மூலம் பதவியை வறிதாக்கினாலொழிய உறுப்பிலர் பதவிக்காலம் நாற்பத்தெட்டு மாதங்களாகும்.

தவிசாளர் அல்லது, அவர் வருகை தராதபோது துணைத் தவிசாளர் பிரதேச சபையின் எல்லாக் கூட்டங்களுக்கும் தலைமை தாங்குதல் வேண்டும். தவிசாளர், துணைத் தவிசாளர் ஆகிய இருவரும் வருகை தராதபோது சமுகமளித்துள்ள உறுப்பினர்கள் அவர்களுள் ஒருவரைத் தலைமை தாங்குவதற்கென தெரிவு செய்து கூட்டத்தை நடாத்தலாம்.

பிரதேச சபைக்கு ஆலோசனை வழங்குவதற்கெனத் தனியான குழுக்களும் நியமிக்கப்படுதல் வேண்டும்.

அ) நிதி மற்றும் கொள்கை உருவாக்கம்.

ஆ) வீடமைப்பு சமூக அபிவிருத்தி.
இ) தொழில் நுட்ப சேவைகள்:
ஈ) சுற்றாடலும் வாழ் வசதிகளும்:

பிரதேச சபையின் கூட்ட நடப்பெண் பதவி வகிக்கும் உறுப்பினர்களில் 3/1 பங்கு ஆகும். சபைத் தீர்மானங்கள் சமூகமாய் இருக்கும் உறுப்பினருள், பெரும்பான்மையின ரால் முடிவு செய்யப்படுதல் வேண்டும். கூட்டத்திற்குச் சமூகமாய் இருக்கும் உறுப்பினர் வாக்குகள் சரி சமமாகப் பிரிந்திருந்தால் அறுதியிடும் வாக்கொன்றை தவிசாளர், துணைத் தவிசாளர் கூட்டத்திற்குத் தலைமை தாங்கும் தனது உறுப்பினர் வாக்குக்கு மேல திகமாகப் பிரயோகிக்கலாம்.

பிரதேச சபையின் தொழிற்பாட்டில் கீழ்வரும் விடயங்களும், நடவடிக்கைகளும் உள் அடங்குகின்றன.

அ) பாதைகளும், கட்டடங்களும் அவற்றின் நிர்மாணம், சீர்திருத்தம், பராமரிப்பு,
ஆ) பொதுச் சுகாதாரம் பிரதான நோய்த் தடுப்புச் சேவைகளான சுத்திகரித்தல், குப்பை கூழங்களை அகற்றுதல், குடிநீர் வழங்கல், வடிகால் மலசல கூடங்கள் அமைத்தல், பராமரித்தல், அவற்றைச் சுத்தம் செய்தல், மருந்து தெளித்தல், சுடுகாடுகள் இடுகாடுகள் சூழல் முதலிய வற்றைப் பாதுகாத்தல் அத்துடன் பிரசவ குழந்தை நலனோம்பல் சேவைகளையும், மருத்துவ நிலையங்களையும், ஆயுள்வேத மருந்துச்சாலைகளையும் வழங்குகின்றன.

நீர் வினியோகத் திட்டங்கள், குடிநீர்க் கிணறுகள், குளியல் இடங்கள், தெருவிளக்கேற்றம், சந்தைகள் முறைச் சந்தைகள், சன சமூக நிலையங்கள் முதலான பொதுப்பயன் பாட்டுச் சேவைகளையும் வழங்குகின்றன.

பொது உதவி, தேசிய விபத்துக்கள் ஏற்படும் போது நிவாரண வேலைகளில் ஈடுபடுதல், நூலகங்கள், பூங்காக்கள், விளையாட்டு மைதானங்கள் ஏனைய பொழுது போக்கு வசதிகள் முதலிய சமூக நலச் சேவைகளையும் பிரதேச சபைகள் வழங்குகின்றன.

பிரதேச சபையானது சேவைகளை வழங்குதல் பொருட்டு கீழ்க் காணும் வழிகளில் நிதி ஈட்டுகின்றது.

அ) சபையின் நிதி சட்டங்களினாலும், கட்டளைச் சட்டங்களினாலும் குறிப்பிடப்பட்ட வளங்களிலிருந்து பெறப்படும் வீதங்கள், வரிகள், வாடகைகள், குத்தகைகள்.
ஆ) மாகாண சபையினால் வழங்கப்படும் மானியங்கள்.
இ) பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தினால் வழங்கப்படும் நிதி.
ஈ) உள்ளூர்க் கடன் அபிவிருத்தி நிதியத்திலிருந்தும், வர்த்தக வங்கியிலிருந்தும் பெறப்படும் கடன்கள்.
உ) ஏனைய வளங்களிலிருந்து பெறப்படும் நிதி - அதாவது நன்கொடை, முகவர் நிலையங்கள் மூலம் பெறப்படும் நிதி.
ஊ) குற்றப்பணங்கள், தண்டங்கள் முதலிய வற்றிலிருந்து பெறப்படும் வருமானம் என்பவற்றின் மூலம் திரட்டப்படும்.

பிரதேச சபையின் பிரதம நிர்வாகி தவிசாளரே ஆவார். இப்பதவியை வகிப்பவர் சபையின் விவகாரங்களையும், திறமையையும் பயனுறுதி வாய்ந்தவையாக விளங்கச் செய்வதில் ஜீவாதாரமான பங்கை வகிக்க வேண்டியுள்ளது. தவிசாளர் தனது கடமைகளை நிறைவேற்றுவதில் செயலாளரின் உதவியைப் பெற வேண்டியுள்ளது. தீர்மானம் எடுக்கும் உறுப்பு என்ற வகையில் சபையின் திறன் தவிசாளர் (பிரதம நிர்வாகி) வழங்கும் தலைமைத்துவம், வழிகாட்டுதல், தகவல் ஆகியவற்றின் மீதே பெருமளவுக்குச் சார்ந்திருக்கின்றது.

பிரதேச சபையின் உறுப்பினர்களுக்கு நிருவாகப் பொறுப்பு கிடையாது. அவர்கள் செயற்பாடுகளை நிறைவேற்றுபவர் அல்லர். உறுப்பினரின் பங்குப் பணியானது, வேலைத் திட்டப் பணிகளை வெற்றிகரமாக அமுல்படுத்துவதற்கு அக்கறையுடன், கூட்டங்களில் செயல்பட்டு பயனுடைத்தான தீர்மானங்களை எடுத்தலுக்கு பங்களிப்புச் செய்பவையாகவும் இருத்தல் மேன்மையானது.

பிரதேச சபையின் செயற்பாடுகளை நிறைவேற்றுபவராக செயலாளரே விளங்குகின்றார். தவிசாளருக்கும், சபை ஊழியர்களுக்கும் இடையே இணைப்புப் பாலமாக செயலாளர் விளங்குகின்றார். ஆகவே செயலாளர் சபையின் செயற்பாட்டில் முக்கிய பாத்திரமாகச் செயல்படுகின்றார்.

தவிசாளர் உறுப்பினர்கள் சபையின் ஊழியர்கள் அனைவரும் நிருவாகத்தின் பொதுவான குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்காக ஒரு குழுவாகச் செயற்படல் வேண்டும். அச்செயற்பாட்டில்தான் பிரதேச சபைகள் அமைக்கப்பட்டதன் இலக்கு நிறைவு பெறும் என்பது தெளிவு.

# உலக நாடக வரலாற்றில்
# கிறீஸின் பங்கு

ந. மலர்விழி – கிழக்குப்பல்கலைக்கழகம்.

உலக நாடக வரலாற்றில் கிறீஸின் பங்கு மிக முக்கியமானதாகும். ஏறக்குறைய 2000 ஆண்டுகளுக்கு முன்னர் அதாவது கி.மு. 3500 ஆண்டளவில் கிரேக்கத்தில் ஒழுங்கான நாடகம் நடிக்கப் பெற்றன. கி. மு. 5ம் நூற்றாண்டளவில் ஆண்டு தோறும் நாடக போட்டிகள் நடாத்தப்பட்டு பரிசில்கள் வழங்கப்பட்டன. கிறீஸ் ஐரோப்பிய நாடக பாரம்பரியத்திற்கு வித்தாக அமைந்தது என்று கூறினாலும் மிகையாகாது. இருப்பினும் ஆரம்ப கால நாடகம் எவ்வாறு தோன்றி வளர்ந்தது என்று எவரும் கூறிவைக்கவில்லை. கிறீஸ் அதென்ஸ் (Athens) நகரத்தின் உன்னத காலம் என கருதப்பட்ட கி. மு. 8ம் நூற்றாண்டில் வாழ்ந்த எந்தவொரு எழுத்தாளரும் அக்காலத்திற்கு முற்பட்ட நாடக வரலாற்றை கூறி வைக்கவில்லை.

இருப்பினும் கிறீஸின் நாடகத்தின் உன்னத கால வரலாற்றை ஓரளவு ஏனும் அறிமுகப்படுத்துவதற்கு சில ஆதாரங்களும் கிடைத்துள்ளன. அதாவது ஆராய்ச்சியாளர், அகழ்வாராய்ச்சியாளர்களால் கண்டெடுக்கப்பட்ட நாற்பத்து நான்கு வகையான எழுத்துருக்கள், பூச்சாடிகளில் தீட்டப்பட்டுள்ள நாடகம் சார்ந்த காட்சிகள் என்பன தவிர ஏறக்குறைய இதற்கு நூறு ஆண்டுகளுக்கு முன்னர் அரிஸ்ரேட்டில் என்பவரின் கவிதையியலில் காணப்படும் நாடகம் பற்றிய கருத்துக்கள், தற்கால புதைபொருள் ஆய்வாளர்களின் நுட்பமான யூகங்கள் என்பவற்றில் கிறீஸில் நாடகம் எவ்வாறு நடிக்கபட்டது, எப்போது நடிக்கப்பட்டது, நடிக்கபட்ட நாடகங்கள் யாவை என்பவை போன்ற வினாக்களுக்கு விடை தேடினர் அக்கால கலைஞர்கள். எனவே அவர்களின் பெரும் முயற்சியினால் இன்றும் நாம் கிறீஸின் நாடக வரலாற்றை அறியக் கூடியதாக உள்ளது எனலாம்.

கிறீஸின் அன்றைய அரங்குக்கும் உலகின் இன்றைய அரங்குக்கும் இடையில் அரங்க அமைப்பு, நடிப்பு, நாடக வடிவம் ஆகியன வற்றில் மிகுந்த வேறுபாடு இருந்த போதிலும், கிரேக்க அரங்கில் இருந்து, இன்றைய அரங்கு வரை ஒரு தெளிவான வளர்ச்சிப் பாதையை இனங்காணக் கூடியதாக உள்ளது எனலாம்.

இந்த வகையில் அனைத்து நாடுகளிலும் உள்ளது போல் கிறீஸிலும் நாடகம், சமய காரணங்களினடியாகவே தோன்றியது.கிறீஸின் நாடக கடவுளாக தயோனிசியஸ் கருதப்பட்டார். இவர் கருவளத்தின் கடவுளாகவும், கேளிக்கைகளின் கடவுளாகவும் கருதப்பட்டார். நிலத்தை பெண்ணாக கருதி கருவளச் சடங்குகள் நிகழ்த்துவது பண்டைய சமூகங்களின் மரபாக இருந்தது. தயோனிசியஸ் ஆரம்பத்தில் பெண்களின் தெய்வமாக இருந்து பின்னர் சமுதாயத்தில் ஆண்களின் ஆதிக்கம் ஓங்க இவர் ஆண்களின் கடவுளாக மாற்றப் பட்டார்.

நிலத்தை உழுதல், அறுவடை செய்தல் ஆகியன யாவும் கருவளச் சடங்குகளாக கருதப்பட்டு நிகழ்த்தப்பட்டன. சடங்கு சம்பிரதாயங்களுடனும், ஆடல் பாடல்களுடனும் கூடியதாக இது நிகழ்த்தப் பட்டது. இவை அனைத்திற்கும் கடவுளாக இருந்த தயோனிசியஸ் அடிநிலை மக்களின் கடவுளாகவும் விளங்கினார்.

தயோனிசின் வணக்கத்தில் தியோசோ (Theoso) என்ற குழுவே முதல் ஆட்டத்தை நிகழ்த்தியவர். இக் குழுவினரே தயோனிசியஸ் வழிபாட்டு விழாவில் மக்கள் கூட்டமாக

சென்று வேறொரு இடத்தில் சில சடங்குகள் செய்து மீண்டும் வருவார்கள். இவ்விழாவின் அமைப்பைப் பொறுத்தவரை ''செய்தல்'' குறிப்பிட்ட ஆட்டத்தை ''ஆடுதல்'' ''திரும்பி வருதல்'' ஆகிய நாடகம் சார்ந்த பண்புகள் முக்கியம் பெறுகின்றன.

இவ்வாறு தயோனிசியஸ் வணக்கத்தில் உருவான தியோசோ என்ற குழு, மாயவித்தை நிரம்பிய குலக் குழு நிலையில் இருந்து பிற்பட்ட காலங்களில் வளர்ச்சி அடைந்த மக்கள் கூட்டத்தினரை உள்ளடக்கி கொண்டது அக்குழு வளர்ச்சி அடைந்த போதிலும் தனது குலக் குழு அமைப்புக்களையும் செயல்களையும் சிற்சில மாற்றங்களுடன் தொடர்ந்து தன்னகத்தே வைத்திருந்தது. ஒரு ஆண் குருவின் தலைமையில் பெண்களை கொண்டதாக இக்குழு இருந்தது. குலக்குழுவில் இருந்து ஒருவரை சேர்த்துக் கொள்ளும் நிகழ்ச்சியில் இருந்து பெறப்பட்ட பிரதான கருணம் மூன்று அம்சங்களை கொண்டதாக இருந்தது.

1) திறந்த வெளியை நோக்கி வெறியாட்டத்தோடு வெளியேறல்.
2) பலி கொடுக்கப்படுபவர் துண்டுதுண்டாக்கப்பட்டு பச்சையாக உண்ணப்படுதல்.
3) வெற்றி பெருமிதத்தோடு மீளுதல்.

இவை தயோனிசியஸ் உணர்ச்சிகளின் ஐதிகமாக இக் கருணம் நிலை நிறுத்தப்பட்டது.

இக் கருணம் கிரேக்கத்தின் பல்வேறு 4 பகுதிகளில் பல்வேறு வகையில் வளர்ச்சி அடைந்தது. (பிற்கால சட்டத்தில் அதாவது பெலப்பனிஸ் என்ற பகுதியில் வெறியாட்டுடன் கூடிய ஊர்வலம் பக்தி பாடலாக வளர்ச்சி அடைந்தது) அற்ரிக்கா என்ற பகுதியில் பலியிடுதல் என்ற நிகழ்வு துன்பங்களை ஏற்கும் நிகழ்ச்சியாக வளர்ச்சி பெற்றது. இவற்றினை மேலும் விவரித்து கூறுவதாயின் கிறீசில் திரஜெடி (அவலச்சுவை) சொமெடி (மகிழ்நெறி) சற்றயர் ஆகிய மூன்று நாடக வகைகள் தோன்றின என்று கூறினால் மிகையாகாது.

எனவே முதலில் திரஷடி நாடகம் எவ்வாறு, எங்கு, என்ன வகையில் திரஜடி நாடக ஆசிரியர், நடிக்கப்பட்ட திரஜடி நாடகங்கள் என்ன என நோக்கின் இன்று நாம் அவலச் சுவையில் இருந்த நாடகங்களை' திரஜடி என்கிறோம். ஓர் உயர் பண்பு மிக்க பாத்திரத்தின் நற்பண்புகள் நலிவடைவதே திரஜடி என பிறாட்ளி (Bradly) என்பார் கூறுகிறார் அவலச் சுவை என்ற பொருள் தரும் வகையில் திரஜடி என்ற பதம் வளர்ச்சியுற்ற போதும் அப்பதத்தின் ஆரம்பம் காரண அடித்தளத்தில் ஊற்றெடுத்து பல வழிகளில் பாய்ந்து வந்துள்ளது.

திரஜடி என்ற சொல் 'ரகோடியா' என்ற சொல்லிலிருந்து தோன்றியது. ரகோடியா இரு சொற்களின் சேர்க்கையாளருடன் அதாவது ரகோஸ் (Trogos) + ஓட் (Ode) எனபிரித்த போதும் ராகேஸ் என்பது ஆடு (Goat) எனவும் Ode என்பது பாடல் எனவும் கிரேக்க மொழியில் பொருள் கொள்வர். எனவே ஆட்டுப் பாடல் என மேலும் விரித்து கூறலாம்.


இவ்வாறு ஆட்டுப்பாடல் எனபொருள் கொள்ளப்பட்ட போதிலும் ஆடு தயோனிசியஸின் சின்னமாக கருதப்பட்டது' மேலும் கிரேக்கத்தில் தயோனிசிய நாடக விழாவில் போட்டி நாடகங்களுக்கு பரிசாக ஆடு வழங்கப்பட்டது.

இவ்வாறு இந்த ரகோடியஸ் என்ற ஆட்டுப் பாடல் தயோனிசியஸ் வழிபாட்டுடன் தொடர்புடையதாக இருந்த டித்திராம் (Dithirams) எனப்படும் கூட்டுப்பத்திப் பாடலில் இருந்து தோன்றியதாக கூறப்படுறகிறது. இந்த டித்திராம் பின்னர் ஒரு இலக்கிய வடிவமாக அதாவது கவிதை வடிவமாக வளர்ந்து வந்தது எனவும் கிரேக்க திரஜடி நாடக ஆசிரியர்கள் கூறுகின்றனர். ஆரம்பத்தில் இவ் டித்திராட் தயோசிசிசைப் பற்றி பாடியது. சேயஸ் (Zeccs) என்பவரின் பிள்ளையாக பிறந்த தயோனிசியல் மனிதனுக்கு திராட்சை மற்றும் பழங்களையும் உணவு வகைகளையும் பயிரிட்டு வளர்க்க பயிற்றியதாகவும் பின்னர் அவர் அழிக்க பட்டதாகவும் அதை யடுத்து அவர் கடவுளாக அவதரித்தார் எனவும் இப்பாடல் கூறுகின்றது. இப் பாடலிருந்து திரஜடி ஆரம்பமாகக் கூடியதாக இருந்த காலகட்டத்தில் டித்திராமல் தயோனிசிய புராணம் பாடுவதற்கு பதிலாக தத்தம் இனத்தின் வீரர்கள்பற்றி பாராட்டப்பட்டு வந்தது. அன்றிலிருந்து கிறீடிஸ்ஸின் திரஜெடி தயோனிசியசின் புகழ் பாடுவதை விட்டபோதிலும் அவரது வழிபாட்டின் பிரதான கட்சி அம்சமாக நாடகங்கள் இடம் பெற தொடங்கின.

இன்னும் உண்டு

# குறுக்கெழுத்துப் போட்டி இல. 8

## பிரவேசப் பத்திரம்



பெயர்: ........................................

முகவரி: ........................................

........................................

........................................

கையொப்பம்: ........................................

இப்படிவத்தில் நிரப்பி அனுப்பப்படும் விடைகள் மட்டுமே ஏற்றுக் கொள்ளப் படும்.

முடிவு திகதி 30-6-94

———————————இங்கே வெட்டவும்———————————

### இடமிருந்து வலம்

1: இதிகாசங்களுள் ஒன்று

5. காந்தி இந்தப் போராட்டமும் நடத் தினார்.

6. சாபம் இடு

8. ஓர் இராகம்

10. நூறு – கடைசி எழுத்து மறைந்து விட்டது.

11. துரோகச் செயல்

14. ஒரு வகைச் செடி

15. ஒரு மிருகம் நேர் மாறிக் கிடக்கின்றது

16. ... பொன்னானதால் குழம்பி விட்டது.

### மேலிருந்து கீழ்

1. போலி நடிப்பு

2. விகடப்பாடல், கவுதாரிவகை

3. நிறுக்க உதவுவதால், தலைகீழாக கடைசி எழுத்து மறைந்து விட்டது.

4: வேடர், குழம்பிக்கிடக்கின்னர்

6: வண்டு வகை 4ம், 5ம் எழுத்துக்கள் மாறிவிட்டன.

7: இறைச்சி

9. .......... வீட்டுப் பருவ மச்சான் ... .. பார்வையிலே குழம்பி விட்டான

12: காமன்

13: தோட்டத்தில் பெரியவர் / தலைவன்

# குறுக்கெழுத்துப் போட்டி இல: 7க்கான

## விடைகள்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 சா | 2 த | 3 க | ப் | ப | 4 ற | 5 வை | ■ |
| 6 த | க் | கு | ■ | ■ | 7 கு | ஷ் | 8 பு |
| 9 கா | க | ப் | 10 பு | ள் | ■ | 11 ண் | க |
| 12 சி | க | ண் | டி | ■ | 13 கா | வ | லி |
| 14 ரி | ன் | பா | ■ | ■ | ■ | 15 ச | ட |
| ய | ■ | 16 த் | தி | 17 ன | யா | ம | ம் |
| 18 ன் | 19 ல | பு | ■ | ம் | ■ | ய | ■ |
| ■ | 20 அ | ம் | ச | பா | த | ம் | ■ |

சரியான விடையை எவரும் அனுப்பவில்லை. குறுக்கெழுத்துப் போட்டி 8ஐ முயன்று பாருங்கள்.

1ம் பரிசு 75/- 2ம் பரிசு 50/- 3ம் பரிசு 25/-

அத்துடன் சரியான விடைகள் அனுப்பும் 5 அதிஷ்டசாலிக்கு கிழக்கொளி இதழொன்று பரிசாக வழங்கப்படும்.

---

### அடுத்த இதழில்

கொழும்பு பல்கலைக்கழக சமூக விஞ்ஞான கல்வித்துறைத் தலைவர் சோ சந்திரசேகரன் அவர்கள் எழுதும்
"குடியேற்றவாதக் கல்விக் கொள்கை"

---

சகல விதமான வீட்டுப்பாவனைப் பொருட்களையும்
ஒரே கூரையின் கீழ் குறைந்த விலையில் தரம்
குறையாமல் வாங்க,என்றும் நினைவில் இருக்க
வேண்டியது

## SHANMUGA AGENCY

**139, TRINCO ROAD,**

**BATTICALOA.**

**☎ 065 - 2139**

''எண்ணும் எழுத்தும்
கண்ணெனத் தகும்''

சகலவித பாடசாலை உபகரணங்களுக்கும், சஞ்சிகைகளுக்கும், பாடசாலைப் புத்தகங்களுக்கும்

-நாடுங்கள்-

## சக்தி நூல் நிலையம்

53, திருமலை வீதி,

மட்டக்களப்பு,

என்றும் தரம் குறையாத
அசல் 22 கரட் தங்க
நகைகளை புத்தம்
புதிய டிசைன்களில்
செய்ய

- விரையுங்கள் -



## SHANGEETHA

## JEWELLERY

17/1, MUNAI STREET,
BATTICALOA.
TEL : 065 - 2196

சகல பாடசாலை அப்பியாசப் புத்தகங்கள், பேனாக்கள் உட்பட அனைத்து உபகரணங்களையும் மலிவான விலையில் பெற்றுக் கொள்ளவும், தினசரி பத்திரிகைகள் வாரஏடுகள் (தினமுரசு, மித்திரன், போன்றவை) முதலியவற்றையும் பெற்றுக்கொள்ள

நாடுங்கள்,

செவன மகஜன அபிவிருத்தி லொத்தர் ஏஜெண்டான

# "நியூ பிருந்தா ரேடர்ஸ்"

பிரதான வீதி,
செங்கலடி.

இச் சஞ்சிகை மட்டக்களப்பு புனித செபஸ்தியார் அச்சகத்தில் அச்சிட்டு கிழக்கொளி ஆசிரியர் குழுவினால் 12 - 05 - 94 ல் வெளியிடப்பட்டது.